வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

03.01.2021 ஞாயிற்றுக்கிழமை




# போர்க்குற்றம் நடக்கவில்லை ஜெனிவாவில் நிரூபிக்க தயார்

## அமைச்சர் சரத் வீரசேகர அறிவிப்பு



கொழும்பு, ஜனவரி 03

"இலங்கை இராணுவம் எந்தவகையிலும் யுத்தக் குற்றங்களைப் புரியவில்லை. மாறாக பயங்கரவாத நடவடிக்கையிலிருந்து மக்களை மனிதாபிமான அடிப்படையில் மீட்கும் நடவடிக்கையையே இராணுவம் புரிந்துள்ளது எனவும் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள அனைத்துக் குற்றச்சாட்டுக்களுக்கும் உரிய பதிலளிக்க அரசாங்கம் தயாராகவுள்ளது."

-இவ்வாறு தெரிவித்துள்ளார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர.

02

## கொரோனா தடுப்பு மருந்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை

### நுண்ணுயிரியல் பேராசிரியர் நீலிகா மலவிகே தெரிவிப்பு

கொழும்பு, ஜன.03

கொரோனா தடுப்பு மருந்தை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக நுண்ணுயிரியல் பேராசிரியர் நீலிகா மலவிகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஒவ்வொரு மாத இறுதியிலும் கொரோனா வைரஸின் தன்மை தொடர்பில் ஆராய தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் அர

02

## கொரோனாவால் மரணித்தாலும் உடலை அடக்கம் செய்ய முடியும்

### வைத்திய அதிகாரிகள் சங்கம் கூறுகிறது

கொழும்பு, ஜன.03

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்க முடியும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் விஞ்ஞான ரீதியான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசேட ஆய்வின் ஊடாக, சடலங்

02

## நேற்று மேலும் 502 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

கொழும்பு, ஜன.03

நாட்டில் நேற்று கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 502 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இனங்காணப்பட்டவர்களில் பேலியகொடை கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய 228 பேரும், சிறைச்சாலை கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய 83 பேரும் அடங்குவர் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

02

## கொரோனா வைரஸ் தன்மை தொடர் கண்காணிப்புக்குள்

கொழும்பு, ஜன.03

கொரோனா வைரஸின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா? என தொடர் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி

02

## அச்சுவேலி வங்கிக் கிளையின் ஊழியர்கள் தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 03

தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலி கிளை முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்களை தனிமைப்படுத்துமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த டிசெம்பர் 22ஆம் திகதி அந்த வங்கிக் கிளைக்குச்

02

## 10 அத்தியாவசிய பொருள்களுக்கு நிர்ணய விலையைப் பேண முடிவு

### வர்த்தக அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜன.03

10 அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான நிர்ணய விலையைப் பேணுவதற்கு வர்த்தகத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய அரிசி, மா, பருப்பு ,ரின் மீன், நெத்தலி, வெங்காயம், உருளைக்கிழங்கு, கோழி இறைச்சி மற்றும் முட்டை ஆகிய 10 அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான நிர்ணய விலை அடுத்த மாதம் முதல் அமுல்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

நுகர்வோர் அத்தியா

02

## கொரோனா தொற்றினால் உயிரிழப்பு 211ஆக உயர்வு

கொழும்பு, ஜன.03

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 211 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று இரவு 8 மணிவரை 3 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

கொழும்பு 13 பிரதேசத்தைச் சேர்ந்த 93 வயது பெண்ணொருவர் கடந்த டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி உயிரிழந்தார். மரணத்துக்கு காரணம் கொரோனா தீவிர மடைந்தமையாகும்.

அடையாளங்காணப்

02



## திருமலை மாணவர்களுக்கு யாழில் நேற்று நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜன.03

திருகோணமலை கடற்கரையில் சுட்டுக்கொலை செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் 15 ஆம் வருட நினைவேந்தல் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

2006 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 2 ஆம் திகதி, திருகோணமலை கடற்கரையில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட, 5 பல்

02

## கொரோனா பரவலை தடுக்க 70 வீதமானோருக்கு தடுப்பூசி

### அனில் ஜாசிங்க அறிவுறுத்து

கொழும்பு, ஜன.03

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் நாட்டு மக்கள் தொகையில் நூற்றுக்கு 70 வீதமானவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படவேண்டும் என சுற்றாடல் அமைச்சின் செயலாளர் முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

02

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## கொரோனாவால்...

களை அடக்கம் செய்வதில், எவ்வித பிரச்சினையும் இல்லை என்பது உறுதியாகியுள்ளது.

நாட்டில் நிலவும், பல்வேறு கருத்து வேறுபாடுகளை கருத்தில்கொண்டு, வைத்திய அதிகாரிகள் சங்கம், கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் சடலங்கள் தொடர்பில், அவசர ஆய்வு ஒன்றை நடத்தியிருந்தது.

அதனடிப்படையில், சடலங்கள் தொடர்பில், இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கம், 7 பரிந்துரைகளை முன் வைத்துள்ளது.

1. கொரோனா தொற்று, சுவாசக் குழாய் வழியாக மட்டுமே ஏற்படும் நிலையில், குறித்த வைரஸ், உயிரணுக்களில் மட்டுமே பரவும்.

2. வைரஸ், உயிருள்ள கலத்தில் மட்டுமே வளர முடியும் என்பதால், உயிரற்ற உடலில், அது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உயிர் வாழ முடியாது.

3. பிரேத பரிசோதனையில், பி.சி.ஆர் முடிவுகள் நேர்மறையானவை என்றாலும், சடலங்களில் இருந்து வைரஸ் பரவுகிறது என்பதை, திட்டவட்டமாக கூற முடியாது.

4. அடக்கம் செய்யப்படும் உடல்களினால் ஏற்படும் நீர் மாசுபாட்டை விட, தொற்றாளர் ஒருவரால் வெளியேற்றப் படும் கழிவுகளால், நீர் கடுமையாக மாசுபடக்கூடும்.

5. நிலத்தடி நீரில், வைரஸ் துகள்கள், பல சந்தர்ப்பங்களில் பதிவாகியுள்ள போதும், வைரஸினால் நோய்த்தொற்றுகள் பற்றிய தகவல்கள் எதுவும் இல்லை.

இதற்கு முன்னர் பதிவான இன்புளுவென்சா மற்றும் சார்ஸ் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆழமான ஆய்வுகளில் கூட, அவ்வாறான தொற்று நோய்கள் குறித்து எதுவும் பதிவாகவில்லை.

6. டென்மார்க்கில் கொலை செய்யப்பட்டு அடக்கம் செய்யப்பட்ட கீரிகள், மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டமைக்கான காரணம், நீர் மாசடைவதன் காரணமாக இல்லை.

உக்கும் கீரிகளின் உடல்களில் இருந்து, நைட்ரஜன் கழிவுகள், சூழல் மற்றும் நீருடன் கலப்பதனாலாகும்.

7. நீரினால் பரவும் கொலரா போன்ற, கொடிய நோய்களில் உயிரிழப்பவர்களின் சடலங்கள் கூட, அடக்கம் செய்யப்படுகின்றன- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## போர்க்குற்றம்...

அதேவேளை, ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் பல நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்கத் தமது விருப்பை வெளியிட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இவ்வருடம் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கை இராணுவம் எந்தவகையிலும் யுத்தக்குற்றங்களைப் புரியவில்லை. மாறாக பயங்கரவாத நடவடிக்கையிலிருந்து மக்களை மனிதாபிமான அடிப்படையில் மீட்கும் நடவடிக்கையையே இராணுவம் புரிந்துள்ளது. அந்த வகையில் இலங்கை இராணுவம் உலகில் எங்குமில்லாத வகையில் மனிதநேய செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளது. அதற்கான ஆதாரங்கள் எம்மிடமுள்ளன. ஆகவே ஆதாரத்துடன் இதனை நிரூபிக்க இலங்கை அரசாங்கம் தயாராகவுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் பரணகம ஆணைக்குழுவின் அறிக்கை ஆகியவற்றை இதற்கு முன்னர் ஐ.நா. மனித பேரவையில் ஒப்படைக்கத் தயாரானபோது தருஸ்மன் ஆணைக்குழு மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அல்-ஹூசைன் இடமளிக்கவில்லை.

எனவே, இம்முறை இடம்பெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரின்போது இலங்கை அரசாங்கம் அந்த இரு அறிக்கைகளையும் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளது. அத்துடன் இலங்கையில் யுத்தக்குற்றம் இடம்பெறவில்லை என ஆதாரத்துடன் நிரூபிக்க அரசாங்கம் தாயாராகவுள்ளது. இந் நிலையில் இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க இதுவரை சீனா, ரஷ்யா, கியூபா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளும் தயாராகியுள்ளன.

மேலும் கடந்த அரசாங்கம் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவுக்கு சாதகமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தது.

எனினும் தற்போதைய அரசாங்கம் அத்தகைய தீர்மானங்களிலிருந்து விலகி நாட்டின் சுயாதீனத்துவத்தையும் அபிமானத்தையும் பாதுகாத்துக்கொண்டு ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்தொடருக்கு முகங்கொடுக்கவுள்ளது- என்றார். (அ-எ)

## கொரோனா வைரஸ்...

பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் ஏற்பட்டுள்ள புதிய வகை கொரோனா வைரஸ் நாட்டுக்குள் பரவாமல் இருப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் ஆய்வுகூடங்களில் விசேட பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். (அ-எ)

## கொரோனா தடுப்பு...

சாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தற்போது, நிலை மாற்றமடைந்துள்ள கொரோனா வைரஸ் தொடர்பில், உலகளாவிய ரீதியில் அனைவராலும் பேசப்பட்டு வருகின்றது.

பிரித்தானியாவில் மாத்திரமன்றி, தென்னாபிரிக்காவிலும் அத்தகைய சிக்கலுக்குரிய வைரஸ் காணப்படுகின்றது.

அது, தற்போதுள்ள வைரஸை விடவும், நூற்றுக்கு ஐம்பது சத வீதம் வேகமாக பரவக் கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கிறது.

ஆகையால், இது குறித்து அனைவரும் அச்சம் அடைந்துள்ளனர்.

இவ்வாறு நிலை மாற்றமடைந்த புதிய வைரஸ் எமது நாட்டில் பரவக் கூடுமா?

அவற்றின் தன்மை எத்தகையது? போன்ற விடயங்கள் குறித்து, நாம் தொடர்ச்சியாக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

எனினும், தற்போது, மீண்டும் விமான நிலையங்கள் திறக்கப்பட்டுள்ள நிலையில் புதிய வைரஸ் தொடர்பில், நன்கு ஆராய்வது அவசியமாகும்.

ஆகவே, ஒவ்வொரு மாத இறுதியிலும் உள்ள வைரஸின் தன்மை குறித்து மாத்திரம் ஆராயாமல், இனிமேல், அதனை இரு வாரங்களுக்கு ஒருமுறை அல்லது வாரம் ஒருமுறை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்திருக்கிறோம்.

உலக சுகாதார ஸ்தாபனத்தினால், அதற்கான நிதி உதவி வழங்கப்பட்டிருப்பதால், எதிர்வரும் காலங்களிலும், அதனை எவ்வித தடைகளுமின்றி மேற்கொள்ள முடியும்.

அடுத்ததாக, உலக நாடுகள் சிலவற்றில், கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து கண்டறியப்பட்டுள்ள நிலையில், அதனை இலங்கைக்குப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளும், முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை, சரியான மட்டத்தில் பேணுவது அவசியமாகும்.

அதற்கு ஏற்றவாறான உணவுப் பொருட்களை உட்கொள்வதுடன், முறையான உடற் பயிற்சியும் செய்ய வேண்டும்- என்றார். (அ-எ)

# சுயதனிமைப்படுத்தினர் கல்முனை பிரதேச மக்கள்

கல்முனை கொரோனா கட்டுப்பாட்டு செயலணியின் வேண்டுகோளுக்கிணங்க கல்முனை செய்லான் வீதி முதல் சாஹிரா கல்லூரி வீதி வரைக்கும் இடைப்பட்ட பகுதியில் வசிக்கும் மக்கள் நேற்றுப் பிற்பகல் 6 மணியிலிருந்து தங்களைச் சுயதனிமைப்படுத்திக் கொண்டனர்.

இப்பிரதேசத்திலுள்ள சகல வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டும், வீதிப் போக்குவரத்துக்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. இதன்மூலம் மக்கள் கொரோனா கட்டுப்பாட்டு செயலணியின் வேண்டுகோளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

ஆனாலும் கடந்த 6 நாள்களாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள கல்முனை பிரதேச 11 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வாழும் மக்கள் அன்றாட தேவைகளை நிறைவு செய்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்ற நிலையில், இந்த பிரதேசத்தின் அனைத்து உள்வீதிகளும் வீதித் தடைகள் போடப்பட்டு இராணுவத்தினரும் பொலிஸாரும் கண்காணிப்பு நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். (எ)

## நேற்று மேலும்...

இதனையடுத்து நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 44 ஆயிரத்து 371 ஆக உயர்ந்துள்ளது.

தற்போது நாடு முழுவதுமுள்ள வைத்தியசாலைகளில் 7,433 கொரோனா தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேநேரம் கொரோனா தொற்று சந்தேகத்தின் பேரில் 586 பேர் வைத்தியக் கண்காணிப்பில் உள்ளனர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளான 36 ஆயிரத்து 717 பேர் குணமடைந்துள்ளனர். 211 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-எ)

## 10 அத்தியாவசிய...

வசிய உணவுப் பொருள்களை நிர்ணய விலையில் கொள்வனவு செய்யும் நோக்குடன் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு நிர்ணய விலையைப் பேணுவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நிர்ணய விலையில் அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்கக்கூடிய வர்த்தகர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும். அடுத்த மாதம் முதல் இந்தத் திட்டத்தை அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றுள்ளது. (அ-எ)

## சிவில் நிர்வாகத்தை...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்களில் களமறிக்கப்பட்டுள் ளதை காணமுடிகிறது. இருந்தபோதிலும் கொவிட்-19 அச்சுறுத்தலுக்கு முன்னரே பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகள் சிவில் நிர்வாக சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த நிலையில் தற்சமயம் கொவிட்-19 அச்சுறுத்தல் விரிவடைந்த சூழல் இராணுவ ரீதியான அமுலாக்கங்களுக்கு மேலும் இடமளித்ததாகவே இருக்கின்றது.

காலப்போக்கில் நலிவடைந்து செல்லும் இலங்கையின் சிவில் நிர்வாக சேவையை பலப்படுத்துவதற்குப்பதிலாக, இராணுவ அதிகாரிகளையே சிவில் நிரவாக விடயங்களில் ஈடுபடுத்துவது இலங்கை விரைந்து ஓர் இராணுவ ரீதியான நிர்வாகக் கட்டமைப்பை நோக்கி அரசின் அனுசரணையோடு நகர்ந்து செல்கின்றதோ என்ற அபிப்பி ராயத்தையே ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

## கொரோனா தொற்றி...

படாத சுமார் 70 - 80 வயது மதிக்கத்தக்க மருதானை பொலிஸ் பிரிவில் ஆணொருவர் கடந்த டிசெம்பர் 30 ஆம் திகதி உயிரிழந்தார் இவரது மரணத்திற்கான காரணம் கொரோனா தொற்று எனக் கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பு 12 பிரதேசத்தைச் சேர்ந்த 76 வயது ஆணொருவர் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர் என்பது உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, ஹோமாகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோது அந்த வைத்தியசாலையில் நேற்றுச் சனிக்கிழமை உயிரிழந்தார். உயிரிழப்புக்கு காரணம் கொரோனா நிமோனியா நிலையாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## திருமலை...

கலைக்கழக மாணவர்களின் 15 ஆம் வருட நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சிப் பிரதிநிதிகள், மலர் தூபி, ஒளியேற்றி அஞ்சலி செலுத்தினர்.

2006 ஆம் ஆண்டு, யோ.ஹேமச்சந்திரா, ம.ரஜீகர், ச.கஜேந்திரன், லோ.ரோகன், த.சிவானந்தா ஆகியோர் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். (அ-எ)

## கொரோனா பரவலை...

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் கண்டுபிடித்துள்ள தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள இலங்கை போன்ற நாடுகள் அதற்காகப் பாரியளவில் முயற்சிக்க வேண்டும்.

கடந்த வருடம் மார்ச் மாதத்தில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் மக்களுக்குத் தெரிந்த விடயங்களை விட தற்போது அதிகளவில் அறிந்து கொண்டுள்ளனர் .

இந்நிலையில், கொரோனா வைரஸ் தொற்றை நாட்டில் முழுமையாகக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் மக்கள் தொகையில் நூற்றுக்கு 70 வீதமானவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படவேண்டும். அவ்வாறில்லையெனில் குறைந்த பட்சம் நூற்றுக்கு 50 வீதமானோருக்கேனும் தடுப்பூசி வழங்கப்பட வேண்டும்.

அத்துடன், கொரோனா வைரஸ் பரவும் நெருக்கடி நிலையில் மூடநம்பிக்கைகளுக்குப் பின்னால் செல்லாது விஞ்ஞான ரீதியான அணுகுமுறைகளைக் கடைப்பிடிப்பதே சிறந்த விடயம். கண்டுபிடிக்கப்படும் இந்தத் தடுப்பூசிகளின் மூலம் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கக் கூடிய தாகவிருப்பின் அது நன்மையபயக்கக் கூடிய விடயமாகும்- என்றார். (அ-எ)

## அச்சுவேலி...

சென்ற இராணுவ உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளதாக கண்டறியட்டப்பட்ட நிலையில் இந்த பணிப்பு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரனால் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் பணியாற்றும் இராணுவ உத்தியோகத்தர் ஒருவர் தனது விடுப்புக் காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார். அவர் டிசெம்பர் 22ஆம் திகதி தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலிக் கிளைக்கும் சென்றுள்ளார்.

இந்த நிலையில் இராணுவ உத்தியோகத்தர் கொழும்பு திரும்பிய நிலையில் கடந்த 30ஆம் திகதி புதன்கிழமை பி.சி.ஆர் பரிசோதனையில் அவருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட அறிவித்தலின் அடிப்படையில் தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் இன்று தொடக்கம் குடும்பத்தினருடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு இன்று பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்பட்டு கிடைக்கும் முடிவின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ-03)

Eelanadu ஈழநாடு
03.01.2021 ஞாயிற்றுக்கிழமை
சார்வாரி, மார்கழி 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# மாகாண சபை விவகாரம்?

மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் பிற்போட்டுள்ளது. தேர்தலை நடத்தக்கூடாதென்றும் ஒரு சில அரச ஆதரவு கடும்போக்குவாத அமைப்புக்கள் தொடர்ச்சியாக சத்தமிட்டுவருகின்றன. புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டுவருவதன் ஊடாக, மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்கவேண்டுமென்றும் அவ்வாறான அமைப்புக்கள் வாதிடுகின்றன. அதேவேளை, அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் அட்மிரல் சரத் வீரசேகர போன்றவர்களும் மாகாண சபை முறைமையை நீக்கவேண்டுமென்று பகிரங்கமாக கூறிவருகின்றனர். தென்னிலங்கையின் சிங்கள அடிப்படைவாதிகள் இவ்வாறு கூறுவதற்கு பின்னால் ஒரு தெளிவான காரணமுண்டு. அதாவது, மாகாண சபை முறைமையென்பது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவு. எனவே, அந்த முறைமையை இல்லாதொழிப்பதன் ஊடாக தமிழர் பிரச்னையில் இந்தியாவின் தலையீட்டை அகற்றலாமென்று அவர்கள் எண்ணுகின்றனர்.

சிங்கள கடும்போக்குவாதிகளின் பிரச்னை இதுவென்றால், தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிக்கொள்ளும் சிலரும், மாகாண சபையை ஏற்றுக்கொள்ளவில்லை - அதனை ஓர் ஆரம்பப் புள்ளியாகக்கூட ஏற்றுக்கொள்ள முடியாதென்று கூறிவருகின்றனர். சில தினங்களுக்கு முன்னர்கூட, மாகாண சபை முறைமையை தாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார். ஆனால் அவ்வாறு கூறும் பொன்னம்பலம், மாகாண சபையில் ஒன்றுமில்லையென்பதை நிரூபிப்பதற்காக தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் கூறிவருகின்றார். இது முற்றிலும் முரணாண கூற்றாகும்.

இது இவ்வாறிருக்க, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்திய ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலில், மாகாண சபையில் கைவைப்பது நெருப்போடு விளையாடுவதற்கு ஒப்பானது. எதுவானாலும் இந்தியாவுடன் பேச வேண்டுமென்று தெரிவித்திருக்கின்றார். அதே போன்று, எதிரணி அரசியல்வாதிகளும் மாகாண சபையை இல்லாதொழிக்கும் யோசனையை எதிர்த்துப் பேசிவருகின்றனர். ஒருவேளை மாகாண சபை முறைமையை நீக்கும் முயற்சியில் சிங்கள அடிப்படைவாதிகள் வெற்றிபெற்றால், அதன் பின்னர் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை எந்தப் புள்ளியிலிருந்து ஆரம்பிப்பது? - இந்தக் கேள்விக்கு எவரிடமும் பதிலில்லை. இதனைக் கருத்தில்கொண்டே, சில புலம்பெயர் அமைப்புக்கள் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள, மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடரின்போது, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக சமஷ்டித் தீர்வை வலியுறுத்த வேண்டுமென்று ஆலோசனை தெரிவித்திருந்தன. பெரும்பாலான அமைப்புக்கள் இந்த விடயத்தில் ஒன்றுபட்டிருந்தாலும்கூட, தனிநாட்டு கோரிக்கையை வலியுறுத்திவரும் சில புலம்பெயர் அமைப்புக்களின் தலையீட்டினால் அந்த முயற்சிக்கு குந்தகம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, தமிழர் சார்பில் முன்வைக்கப்படவுள்ள பரிந்துரையில், எதனையும் குறிப்பிடாமல் விடுவதென்று உடன்பாடு காணப்பட்டிருக்கின்றது. இவ்வாறு உடன்பாடு காணப்பட்ட பரிந்துரையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டிருக்கின்றனர். ஆனால், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட் தலைவர் சித்தார்த்தன் பரிந்துரையில் உடன்பட்டிருந்த போதிலும்கூட, தனது நிலைப்பாடு சமஷ்டித் தீர்வு என்பதையும் வலியுறுத்தியிருக்கின்றார்.

மாகாண சபை முறைமையில் சில குறைபாடுகள் இருக்கின்ற என்பது உண்மை. ஆனால் தற்போதைய சூழலில், தமிழ் மக்கள் வடக்கு கிழக்கில் அதிகாரத்தில் பங்குகொள்வதற்கு மாகாண சபையொன்றுதான் இருக்கின்றது. ஒன்றை முற்றிலுமாக நிராகரிக்கின்றபோது, அதற்கான மாற்று ஏற்பாட்டை முன்வைப்பதற்கான ஆற்றலிருக்க வேண்டும். அல்லது, அவ்வாறானதோர் ஆற்றல் வரும்வரையில், இருப்பதை பயன்படுத்திக்கொள்ளும் தந்திரோபாயம் தொடர்பில் சிந்திக்கவேண்டும். ஆனால், தமிழ்ச் சூழலிலோ இரண்டும் இல்லை. ஆனால் தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் போதாதென்று வாதிடும் அரசில்வாதிகள் எவருமே, இருக்கின்ற அதிகாரத்தின் மூலம் கிடைக்கும் வசதிகளை அனுபவிப்பதை ஒருபோதுமே புறக்கணித்ததில்லை. தாங்கள் மாகாண சபை வசதிகளை முழுமையாக அனுபவித்துக் கொண்டே, மாகாண சபையில் ஒன்றுமில்லை என்று வாதிட முற்படுகின்றனர்.

# சிவில் நிர்வாகத்தை புறந்தள்ளும் இராணுவ நிர்வாகம்!

- அலசுவது இராஜதந்திரி -

*உலகில் கடந்த ஆண்டு ஆரம்பத்தில் அசுரத்தனமான முறையில் உருவெடுத்த கொவிட்-19 வியாதி தற்போது புதிய வீரியத்தோடு ‘வீறுநடை’ போட ஆரம்பித்துள்ள தையே அவதானிக்க முடிகின்றது.*

*கொவிட்-19 அச்சுறுத்தலை கையாள புதிய தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதிலும் அதன் பயன்பாடு முற்று முழுதான வெற்றியளிப்பதில் கூட சந்தேகமே நிலவுகின்றது.*

*இந்நிலையில் இலங்கையில் கொவிட்-19 தடுப்பு நடவடிக்கைகள் ஆட்சியதிகாரங்களில் கூட கையோங்கியுள்ளதுடன் முழு நாட்டையும் இராணுவ மயப்படுத்தப்பட்ட சூழலுக்கே இட்டுச்சென்றுள்ளது.*

*கடந்த ஆண்டு ஆரம்பத்தில் கொவிட்-19 அச்சுறுத்தல் இலங்கையில் ஏற்பட ஆரம்பித்ததுமே நன்கு திட்டமிட்ட முறையில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது. ஆயுதப்படையினரும் கொவிட் - 19 அச்சுறுத்தலை கையாளும் விதத்தில் மருத்துவத்துறையினருக்கு உதவியிருந்தனர்.*

**பன்மடங்கு அதிகரிப்பு**

*ஆயினும் தற்போது கொவிட்-19 வியாதிக்கான தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள தருணத்தில் அக்கொடிய வியாதியின் தாக்கமும் பன்மடங்கு அதிகரித்துள்ளதையும் இலங்கையில் கூட முன்பிருந்ததைவிட கொரோனா தாக்கம் அதிகரித்துள்ளதையே அவதானிக்க முடிகிறது.*

*எனவே தற்போதைய கொவிட்-19 நிலபரத்தை கையாள இராணுவத்தினர் இலங்கையின் 25 நிர்வாக மாவட்டங்களுக்கும் ஒருங்கிணைப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*இலங்கை மூன்று தசாப்த கால வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாக ஓர் இராணுவ மயப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருந்தது. ஆயினும் பாதுகாப்பு நடவடிக்கைகளிலேயே இராணுவத்தினர் முழு அளவில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனரே தவிர அவர்களின் தலையீடு சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் காணப்பட்டிருக்கவில்லை.*

*ஆயினும் தற்போது இராணுவத்தினர் ஒருங்கிணைப்பு அதிகாரிகளாக 25 மாவட்டங்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ளது டன், வடக்கே 2009 ஆம் ஆண்டு இறுதிக் கட்ட யுத்தத்தில் பங்கேற்ற இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

**சிவில் நிர்வாகத்தில் படையதிகாரிகள்**

*சகல 25 நிர்வாக மாவட்டங்களுக்கும் மேஜர் ஜெனரல் தரத்திலுள்ள அதிகாரகளே நியமிக்கப்பட்டுள்ளதுடன் இவர்களில் பலரும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் யுத்த காலங்களில் பணியாற்றிவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.*

*எனவே அவசரகால நிலவரங்களில் கடமை புரிவதில் ஆயுதப்படையினர் நன்கு பரிச்சயமானவர்களாகவே இருக்கின்றனர்.*

*கொவிட்-19 வியாதி கூட ஒரு கொடிய நோயாக சவால் விட்டுள்ள நிலையில் அதனை கட்டுப்படுத்துவதற்தான நடவடிக்கைகள் விரைவான உத்வேகத்துடன் கூடிய கட்டுப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட வேண்டியதே அவசியமானதாகின்றது.*

*மூன்று தசாப்த கால யுத்தத்தில் மனித உயிர்ப்பலி குறிப்பிடத்தக்களவில் காணப்பட்டிருந்ததுடன் ஆயுதப்படையின ரின் நடவடிக்கைகளும் நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தப்பட்டிருந்தது.*

*யுத்தம் நிறைவுற்று ஒருதசாப்த காலம் பூர்த்தியாகியுள்ள நிலையில் கொவிட்-19 வியாதி பயங்கர உயிர்க்கொல்லியாக இலங்கையில் யுத்தகாலத்தில் ஏற்பட்டிராத சூழ்நிலைகளைக்கூட உருவாக்கிவிட்டுள்ளது.*

**குறுக்கிடப்படாத விமான, கப்பல் சேவைகள்**

*விமான போக்குவரத்து அல்லது கப்பல் போக்குவரத்து என்பவைகூட யுத்தகாலத்தில் தடைப்படவுமில்லை. துறைமுகங்கள், விமான நிலையங்கள் என்பவை கூட மூடப்பட்டிருக்கவுமில்லை.*

*ஆனால் தற்போது கொவிட்-19 உலகளாவிய அச்சுறுத்தலாக இருக்கின்ற நிலையில் ஆளணிகளுடைய பயன்பாடு என்றுமில்லாதவாறு உலகின் அனைத்து பாகங்களிலும் அதிகரித்துள்ள நிலையே காணப்படுகின்றது.*

*இலங்கை கூட இதற்கு விதிவிலக்கல்ல என்பதையே இராணுவத்தினர் கொவிட்-19 அச்சுறுத்தலை எதிர்கொள்ள பயன்படுத்தப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.*

**இராணுவ நிர்வாகம்**

*இருந்தபோதிலும் இலங்கையில் ஆயதப்படையினர் நிர்வாக விடயங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளமை கொவிட் -19 அச்சுறுத்தல் விரிவடையுமுன்னரே ஆரம்பமாகியிருந்தது.*

*இலங்கையின் சிவில் நிர்வாக சேவை சர்வதேச ரீதியாக பிரபலமடைந்திருந்த காலமும் முன்பு நிலவியிருந்தது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இலங்கையின் சிவில் நிர்வாக சேவை பிரித்தானிய சிவில் சேவைக்கு ஒப்பானதாகவும் விளங்கியிருந்தது.*

*இலங்கையின் சிவில் சேவை அதிகாரிகள் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் வேலை வாய்ப்புகளை பெரிதும் பெற்றிருந்தனர்.*


*ஆனால் இலங்கையின் சிவில் சேவை என்பது தற்சமயம் கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைமையே காணப்படுகின்றது.*

*சிவில் நிர்வாக சேவையில் ஊழல், நிர்வாக திறமையின்மை ஆகியவை மலிந்துள்ளமை குறித்து ஏராளமான முறைப்பாடுகளும் இடையறாது வெளிவந்தமேயுள்ளன.*

*இத்தகைய சூழலின் பின்னணியிலேயே ஆயதப்படை அதிகாரிகள் சிவில் நிர்வாக*

(02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு

# இரண்டாவது அலை உருவாக அரசின் இயலாமையே காரணம்

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு



கொழும்பு,ஜன.03

**நாட்டில் புதிய நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றமைக்கு அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், அரசின் அசமந்தப் போக்கே நாட்டில் கொரோனா தொற்றின் இரண்டாவது அலை ஏற்பட்டக் காரணம்.

அத்துடன் தொற்றின் இரண்டாவது அலை ஏற்படக் கூடும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில், அரசு அதனை எதிர் கொள்ள தயாராக இருக்க வில்லை.

எனினும், கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த சுகாதாரத் துறையினர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் உள்ளிட்ட தரப்பினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட போதிலும், அரசின் இயலாமை காரணமாக அதனை கட்டுப்படுத்த முடியாது.

மாகாண சபையை மீண்டும் செயற்பாட்டுக்கு கொண்டு வருவதானது முட்டாள்த்தனமான விடயம். மாகாண சபைக்கு புதிய முகங்களையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்-என்றார்.

## 251 இலங்கையர் நாடு திரும்பினர்!

கொழும்பு, ஜன. 03

கொரோனா தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 251 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

நேற்றுக் காலை 8.30 அளவில் நிறைவடைந்துள்ள 24 மணிநேர காலப்பகுதிக்குள் பல்வேறு நாடுகளில் இருந்து 11 விசேட விமானங்கள் ஊடாக இவர்கள் நாடு திரும்பினர்.

அத்துடன் கட்டார் டோஹா நகரில் இருந்து 103 பேரும் அபுதாபியில் இருந்து 47 பேரும் இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, இந்தக் காலப் பகுதியில் சுமார் 387 இலங்கையர்கள் பல்வேறு தேவைகளின் நிமித்தம் வெளி நாடுகளுக்கு பயணித்துள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய கடமைநேர பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

## 479 துப்பாக்கிகள் 2020 இல் மீட்பு!

கொழும்பு, ஜன. 03

கடந்த ஆண்டு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது, 479 சட்டவிரோத துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன.

இவற்றில் பெரும்பாலானவை உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளாகும். உள்நாட்டு துப்பாக்கிகள் 250 உள்ளன.

சோதனையின்போது 126 ஷொட்கன்கள், 15 கைத்துப்பாக்கிகள் மற்றும் 33 ரி -56 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டதாக விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

477 சோதனைகளில் இந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன் 355 சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.





**மேடம்**
ஆதாயம் உண்டு. புகழ்மிக்கவர்களை சந்திப்பீர்கள். திட்டங்களை சேதாரம் இன்றி நிறைவேற்று வீர்கள். நிதானப்போக்கு காரணமாக வரவிருந்த சிக்கல் நீங்கும்.

**இடபம்**
அலைபேசி மூலமாக கேட்கும் செய்தி மகிழ்ச்சி தரும். நண்பர்களிடையே வாக்கு வாதங்கள், மன உளைச்சல். தெளிவான மன நிலையால் பணியிடத்தில் நல்லபெயர் வரும்.

**மிதுனம்**
விட்டுக் கொடுத்து பிரச்னைகளை சமாளிப்பீர்கள். பிரகாசமான நாள். எடுத்த செயலில் வெற்றி காண்பீர்கள். புது வேலை கிடைக்கும். பதவியின் மூலம் உற்சாகம் ஏற்படும்.

**கடகம்**
கிடைக்க இருக்கும் பதவியை எவரும் தடுக்க முடியாது. வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வதில் ஆர்வம். குடும்ப விஷயத்தில் பிறரின் தலையீட்டை அனுமதிக்க வேண்டாம்.

**சிம்மம்**
அதிகாரிகளை அனுசரித்து செல்வது உங்கள் பணிக்கு நல்லது. இன்று இனிய தகவல் வரும். பணியிடம் தொடர்பான பிரச்னைகள் நல்ல முடிவுக்கு வரும்.

**கன்னி**
சமூகத்தில் ஏற்படும் தொடர்பால் அனுபவம் உண்டாகும். இன்று நீங்கள் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அந்தஸ்து உயரும். பழைய நண்பர் தொடர்பு கொள்வார்.

**துலாம்**
குடும்பத்தினரின் குறிப்பறிந்து செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். சொத்து வாங்குவது, விற்பது சுமாரான லாபமே தரக் கூடும். பணியிடம் தலைமைக்கு நெருக்கமாவீர்கள்.

**விருட்சிகம்**
தொழில் வளர்ச்சியடையும். பட்டம், பதவி, புகழ் தேடி வரும். பணியாளர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சி தரும் விஷயங்கள் நடைபெறும்.

**தனுசு**
குழந்தை பாக்கியம் உண்டு. அந்தஸ்து உயரும். விடிவு காலம் ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் தோன்றும். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் அனைத்தும் நீங்கும்.

**மகரம்**
ஒவ்வொரு பேச்சிலும், செயலிலும் அதீத கவனம் தேவை. கவனம் சிதறும். யாரிடமும் வீண் வாக்குவாதங்கள் வேண்டாம். உறவினருடன் இருந்த சச்சரவுகள் நீங்கும் நாள்.

**கும்பம்**
மனம் மகிழ்ச்சி அடையும்படியான சம்பவங்கள் நடைபெறும். வீண் விரயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனம் தேவை. நீங்கள் எதிர்பார்த்த விரும்பத்தக்க மாற்றம் ஒன்று ஏற்படும்.

**மீனம்**
வேலை தேடுபவர்களுக்கு நல்ல செய்தி வரும். தாயாரின் உடல்நலம் பற்றிய வீண் பயம் இன்று தீரும். பெண்கள் உடல்நலத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

## தேசியப்பட்டியல் ஆசனம் குறித்து ஐ.தே.க. அடுத்த வாரம் தீர்மானம்

கொழும்பு, ஜன. 03

ஐக்கிய தேசிய கட்சி தனது தேசிய பட்டியல் பாராளுமன்ற ஆசனம் குறித்து அடுத்த வாரம் முடிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கட்சி சீர்திருத்தங்கள் குறித்தும், வெற்றிடமாக உள்ள இடங்களை நிரப்புவது குறித்து முடிவை எட்ட அடுத்த வாரம் செயற்குழு கூடும் என கட்சி வட்டார தகவல்கள் தெரிவித்தன.

அத்தோடு பொதுச் செயலாளர், தலைவர் மற்றும் பொருளாளர் பதவிகள் வெற்றிடமாக உள்ள நிலையில் இந்த மாதத்தில் புதிய அலுவலக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, தேசியப் பட்டியல் ஆசனம் குறித்து தீர்மானிக்க மேலும் காலத்தை எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.



இந்தவிடயத்தில்கட்சி பொறுமை காக்கவேண்டும் எனக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, உறுப்பினர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பாக தீர்மானிக்கும் முன் பாராளுமன்றத்தின் முன்னேற்றங்களை கண்காணிக்கக் கட்சி விரும்புவதாக ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

## அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜன. 03

அனைத்து அரசியல் கைதிகளையும் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யக்கோரி புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியினால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்-

கடந்த 30 வருட கால இனப்பிரச்னை சம்பந்தமாக நடைபெற்ற போரில் அரசுக்கு எதிராக செயற்பட்டார்கள் என்னும் குற்றச்சாட்டில் நாட்டிலுள்ள சிறைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் அடைக்கப்பட்டு தொடர்ச்சியாக பழிவாங்கப்பட்டு வருகிறார்கள்.

அரசியல் கைதிகள் மீதான வழக்குகள் யுத்தம் முடிவுற்று பதினொரு வருடங்கள் கடந்தும் விசாரணை செய்யப்படாமல் இருந்து வருகின்றன. இது அப்பட்டமான நீதிமறுப்புச் செயற்பாடாகும்.





'காலம்தாழ்த்தி வழங்கப்படும் நீதி,நீதி மறுப்புக்குச் சமனாகும்' என்பதை அரசு கவனத்தில் கொள்ளல் வேண்டும். எனவே அனைத்து அரசியல் கைதிகளையும் எதுவித நிபந்தனையும் இன்றி பொதுமன்னிப்பளித்து விடுதலை செய்யுமாறும் கோருகின்றோம்-என்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் முக்கியஸ்தர்களான, நி.பிரதீபன், டொன் பொஸ்கோ, கட்சி உறுப்பினர்கள், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மத்தியகுழு உறுப்பினர்களான கே.அருந்தவராசா, ரேகன், புதிய அரச பொது ஊழியர் சங்கத்தை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், அரசியல் கைதிகளிற்கு மன்னிப்பே கிடையாதா, கைதிகளை விடுதலை செய், முஸ்லீம்களின் ஜனாஸாக்களை எரிக்காதே, காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டங்களுக்கு பதில் என்ன? போன்ற கோசங்களை எழுப்பியிருந்ததுடன், பதாதைகளையும் தாங்கியிருந்தனர்.

# ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் அறிவியல் தரவுகளைப் பகிர்ந்துகொள்ளத் தயார்

## இலங்கைக்கு ரஷ்யா உறுதி

கொழும்பு, ஜன.03

**இலங்கைக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசி முன்னேற்றங்கள் குறித்து தேவை யான அனைத்து அறிவியல் தரவுகளையும் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாக ரஷ்யா உறுதியளித்துள்ளது.**

இலங்கை சுகாதார அமைச்சு, ரஷ்ய சுகாதார அமைச்சு மற்றும் ரஷ்யாவின் தொற்றுநோயியல் மற்றும் நுண்ணுயிரியல் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்லைன் மூலம் இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது தடுப்பூசி உற்பத்தியில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பம், அதன் பாதுகாப்பு மற்றும் செயற்திறன், மருத்துவ பரிசோதனைகளின் முடிவுகள் மற்றும் ஒப்புதல்களின் நிலை குறித்து இரு தரப்பும் விவாதித்துள்ளதாக வெளி விவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் தொற்றுநோயை எதிர்கொள்ளக்கூடிய சர்வதேச விஞ்ஞான ஒத்துழைப்பின் முக்கியத்தும் மற்றும் இரு நாடுகளின் சுகாதார தொடர்பான உறவை விரிவுபடுத்துவது குறித்தும் இந்த சந்திப்பின் போது முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு இலங்கையில் வைரஸ் மாற்றங்கள் மற்றும் இலங்கையின் நோய்த்தடுப்புத் திட்டம் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி குறித்து இலங்கை தரப்பு ரஷ்ய நிபுணர்களுக்கு விளக்கமளித்ததாகவும் வெளி விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

# தமிழ்த் தலைமைகள் தவறிழைத்துவிட்டன

## கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜன. 03

தமிழ்த் தலைமைகள் கடந்த காலங்களில் விட்ட தவறினாலேயே, இலங்கையை சர்வதேச அரங்கில் நிறுத்தமுடியாதுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் இடம்பெற்ற மக்கள் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2009 ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்ட இன அழிப்பு யுத்தத்துக்கு தலைமை தாங்கி கொண்டு இருந்தவர்கள் தற்போதைய ஆட்சியாளர்கள்தான்.

இன்றைய பிரதமர் அன்றைய ஜனாதிபதியாகவும் இன்றைய ஜனாதிபதி அன்றைய பாதுகாப்பு செயலாளராகவும்இருந்து அதனை செயற்படுத்தி இருந்தார்கள்.

இந்த விடயங்கள் தொடர்பாக சர்வதேச அளவில் செயற்பட்டு, சர்வதேச விசாரணையைக் கொண்டு வந்தால் மாத்திரமே இவர்களை கட்டுப்படுத்த முடியும். இல்லையெனில் தமிழர்களை இங்கு வாழவிடப்போவதில்லை.

கடந்த ஆட்சியாளர்களின் தவறுகளே தற்போது ஜனநாயக விரோத ஆட்சியை அவர்கள் நடத்துவதற்கு காரணமாக காணப்படுகின்றது-என்றார்.



# புதிய மெனிங் சந்தையில் ஏழு பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜன 03

பேலியகொடை புதிய மெனிங் சந்தையில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பீ.சீ.ஆர். பரிசோதனையில் 7 பேருக்கு கொரோனா தொற்றுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 30ஆம் திகதி வர்த்தக நிலைய உரிமையாளர்கள், ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களை இலக்கு வைத்து 120 பீ.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக அந்தப் பிரதேசத்திற்குப் பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

மேற்படி பரிசோதனையின்போது தொற்றாளர்களாக உறுதி செய்யப்பட்ட 7 பேரும் மேலதிக பரிசோதனைகளுக்காக சிகிச்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

# வீரக்கெட்டிய முடக்கம்

கொழும்பு, ஜன. 03

வீரக்கெட்டிய பொலிஸ் பிரிவில் யக்கஸ்துல்ல பிரதேசத்தில் கொரோனா தொற்றாளர்கள் 16 பேர் இனங்காணப்பட்டனர்.

இதனையடுத்து அந்தப் பிரதேசம், நேற்று பிற்பகல் முதல் உடன் அமுலுக்கு வரும் வகையில், முடக்கப்பட்டள்ளது என வீரக்கெட்டிய சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

# அரிசியின் விலை அதிகரிக்க வாய்ப்பு

கொழும்பு, ஜன. 03

நாட்டில் அரிசி விலை மேலும் அதிகரிப்பதற்கான சாத்திக்கூறுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏனெனில் ஏற்கனவே அரிசியின் விலை அதிகரித்துள்ள நிலையில் நெல்லின் விலை அதிகரித்துள்ளமையே இதற்கான காரணமாகும்.

தற்போது சம்பா அரிசியின் விலை ஒரு கிலோ 82 ரூபாவாகவும், நாட்டு அரிசியின் விலை ஒரு கிலோ 62 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

அதேவேளை, தற்போதைய விலையில் அரிசி விற்பனை செய்ய முடியாது என அரிசி ஆலை உரிமையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையில், மரதகஹாமுல அரிசி மொத்த விற்பனை நிலையத்தில் தற்போது சம்பா அரிசியின் மொத்த விலை 130ரூபாவாக அதிகரித்துள்ளதுடன் நாட்டு அரிசியின் மொத்த விலை 106ரூபாவாக அதிகரித்துள்ளது.

# சிறைச்சாலை தொற்றாளர் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 03

நேற்று மட்டும் சிறைச்சாலை களில் 71 கொரோனா தொற்றா ளர்கள் கண்டறியப்பட்டனர்.

இதனை அடுத்து சிறைச் சாலைக் கொத்தணியுடன் தொடர் புடைய தொற்றாளர்களின் எண்ணிக்கை 4087 ஆக உயர்வ டைந்துள்ளது.

இதேவேளை, 3347 பேர் குணமடைந்திருப்பதோடு மேலும் 731 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# புதுவருடத்தன்று 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பி.சி.ஆர். சோதனைகள்

கொழும்பு, ஜன. 03

கொரோனா தொற்று நோயாளிகளை அடையாளம் காண இலங்கையில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மட்டும் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பி.சி.ஆர் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

அதன்படி 14 ஆயிரத்து 600 பி.சி.ஆர் சோதனைகள் நேற்று முன் தினம் நடத்தப்பட்டதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதியில் இருந்து இதுவரை நாட்டில் 12 இலட்சத்து 65 ஆயிரத்து 17 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றில் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதியே அதிக எண்ணிக்கையிலான அதாவது 17 ஆயிரத்து 425 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சு.கவின் புதிய யோசனைக்கு சஜித் தரப்பு போர்க்கொடி!

## மாகாணத் தேர்தலை நடத்த கோரிக்கை

**கொழும்பு, ஜன. 03**
**மாகாணசபை தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முன்வைத்துள்ள யோசனைக்கு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.**



மாகாணசபைகளுக்கான தேர்தல் நடைபெறும்வரை பழைய மாகாணசபைகளை ஸ்தாபித்து முன்னாள்உறுப்பினர்களைஇயங்கு நிலைக்கு கொண்டுவரவேண்டும் என்ற யோசனையை அரசாங்கத்திடம் முன்வைப்பதற்கு சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

இந்த யோசனை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு என்னவென்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்னவிடம் வினவியபோது அவர் கூறியவை வருமாறு,

”தேர்தல்என்பது அரசியல்வாதிகளுக்கு பதவிகளை வழங்குவதற்காக நடத்தப்படுவது அல்ல. மாறாக மக்களின் ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்தி, மக்களின் இறைமைக்காகவே அது நடத்தப்படுகின்றது. எனவே, தேர்தலை எந்நேரமும் எதிர்கொள்வதற்கு நாம் தயார். ஆனால் தேர்தல் என்ற போர்வையில் பதவிகளை வழங்கும் திட்டத்தை ஏற்கத் தயாரில்லை- என்றார்.

# ஐஸ், ஹெரோயின், கஞ்சாவுடன் சிக்கிக்கொண்ட மீன்பிடிப் படகுகள்

கொழும்பு, ஜன. 03

கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது 5.945 கிலோ ஐஸ் போதைப்பொருள், 2.47 கிலோ ஹெரோயின் மற்றும் 03 கிராம் கேரளக் கஞ்சாவுடன் 04 சந்தேக நபர்களை கைது செய்ததாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையின்போது போதைப் பொருட்களை கடத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்ட மீன்பிடிப்படகுகளும் கைப்பற்றப்பட்டன.

இலங்கைக் கடற்படை, போதைப் பொருள் கடத்தல் மற்றும் கடல் மார்க்கமாக நடைபெறும் ஏனைய சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பில் தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்த நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், 22 வயது முதல் 29 வயதுடைய மாத்தறை, பொத்துவில், நீர்கொழும்பு மற்றும் மஸ்கெலிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். போதைப் பொருட்கள் மற்றும் மீன்பிடிப்படகுடன் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபர்கள், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஹிக் கடுவை பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# இலங்கையின் அடுத்த ஜனாதிபதி ராஜபக்ஷ குடும்பத்தவர் அல்லர்

கொழும்பு, ஜன. 03

இலங்கைக்கு அடுத்த முறை புதிய தலைமைத்துவம் ஒன்று கிடைக்கவுள்ளதாக இலங்கையின் பிரபல சோதிடர் சந்திரசிறி பண்டார தெரிவித்துள்ளார்.


அந்த நபர்தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சராக செயற்படுவதாகவும்அவர்சிம்ம ராசி உடையவர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அவர்ராஜபக்ஷ குடும்பத்திற்கு வெளியே உள்ள ஒருவராவார். அவரது பெயரை தற்போது வெளிப்படுத்த முடியாது.

அவரது ஜாதகம் என்னிடம் உள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெறவில்லை என்றால்



துப்பாக்கியால் நானே என்னைச் சுட்டுக்கொல்வதாக கூறியிருந்தேன். எனினும்அது சோதிடத்தில்இருந்த விடயம் அல்ல.

மஹிந்த ராஜபக்ஷ அரசியல் ரீதியில் வெற்றி பெற செய்வதற்கே அன்று நான் அவ்வாறு கூறினேன்- என்றார்.

இணையத்தள ஊடகமொன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

## புதிய அரசியல் கட்சிகளின் பதிவு நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, ஜன. 03

புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை இம்மாதம் ஜனவரி முதல் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இராஜகிரியவில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளதாவது:

இந்த ஆண்டு ஜனவரி முதல் புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான புதிய வரையறைகளை நிர்ணயித்து வர்த்தமானியில் பிரசுரிப்பதற்குத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறுமாக இருந்தால் அதற்காக 400 கோடி ரூபா நிதி ஒதுக்கப்படும்.

அத்துடன் எதிர்வரும் ஜனவரி 11ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது- என்றார்.



# திருகோணமலையில் பி.சி.ஆர். அதிகரிப்பு

திருமலை, ஜன. 03

கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்து வருகின்றமையினால் திருகோணமலையிலும் பி.சி.ஆர்.பரிசோதனை அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் கடந்த 29 ஆம் திகதி 17 பேருக்கு, பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

அந்த நபர் திருகோணமலை நகரின் மத்திய வீதியிலுள்ள கடை ஒன்றில் வேலை செய்து வருபவர் என்பதால் அவருடன் சம்பந்தப்பட்டவர்களிடம் பெறப்பட்ட அன்ரிஜென் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் மேலும் 3பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதன் காரணமாக அந்த வீதியிலுள்ள கடைகளின் உரிமையாளர்களுக்கும் அங்கு பணி புரிபவர்களுக்கும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

ஆகவே, தொற்று அதிகரிக்கக்கூடும் என்பதால் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு சுகாதாரத்துறையினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

# புத்தாண்டு தின விபத்துகளில் 12 பேர் மரணம்! 40 பேர் காயம்!!

கொழும்பு, ஜன 03

புத்தாண்டு தினத்தன்று ஏற்பட்ட வாகன விபத்துக்களில் 12 பேர் உயிரிழந்துள்ளதுடன் 40 பேர் காயமடைந்தனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கு பாதுகாப்பாக வாகனம் ஓட்டுவது தொடர்பாக வழங்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றத் தவறியதே இந்த விபத்துகளுக்கு காரணம் என்றும் அவர் கூறினார்.




# தேசத்திற்காக உயிர் நீத்தவர்களுக்கு பிரதமர் அலுவலக ஊழியர் அஞ்சலி

கொழும்பு, ஜன. 03

2021 ஆம் ஆண்டிற்காக பிரதமர் அலுவலக ஊழியர்கள் தத்தமது பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வு, பிரதமரின் செயலாளர் காமினி செனரத் தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதமரின் செயலாளர் காமினி செனரத், தேசிய கொடி ஏற்றியதை தொடர்ந்து புதிய வருடத்திற்கான பணிகளை ஆரம்பிப்பதற்கான சந்திப்பு இடம்பெற்றது.

முழு நிகழ்வும் சமூக இடைவெளி பேணல் உள்ளிட்ட முறையான சுகாதார வழிகாட்டல்களுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முதலில் இராணுவத்தினர் உள்ளிட்ட தேசத்திற்காக உயிர் தியாகம் செய்த அனைவரையும் நினைவுகூர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

புத்தாண்டில் பணிகளை ஆரம்பிக்கும்போது கொவிட்-19 வைரஸ் பரவலை தடுப்பதற்கான ஒவ்வொருவரது பொறுப்பு குறித்து வலியுறுத்தப்பட்டது.

சுகாதார அமைச்சின் அனர்த்த முன்னெச்சரிக்கை பிரிவின் சமூக வைத்திய நிபுணர் பிரியங்கா திலோஷினி ரணசிங்க அது தொடர்பில் உரை நிகழ்த்தினார்.

முகக்கவசம் அணிதல், அடிக்கடி கை கழுவுதல் ஆகியவற்றின் முக்கியத்துவம் மற்றும் ஒன்றாக உணவு அருந்துவதனால் கொவிட்-19 தொற்று பரவும் அபாயம் ஆகியன குறித்து அவர் தெளிவுபடுத்தினார்.

அதனை தொடர்ந்து சுபீட்சமான இலங்கையை, மகிழ்ச்சியாக வாழும்குடும்பம், ஒழுக்கமான சமூகத்தை உருவாக்குவதற்கு பிரதமர் அலுவலக ஊழியர்களினால் வழங்கப்பட வேண்டிய பங்களிப்பு குறித்து பிரதமரின் செயலாளர் காமினி செனரத் உரை நிகழ்த்தினார்.

# தீவக மக்களின் மருத்துவ நெருக்கடிகளை உருக்கமாகச் சுட்டிக்காட்டினார் வைத்தியர்

யாழ்ப்பாணம், ஜன. 03

மருத்துவர் பற்றாக்குறையினால் தீவக மக்கள் எதிர்கொள்ளும் அவலத்தை சுட்டிக்காட்டியுள்ள பொதுவைத்திய நிபுணர் கல்பனா சிறிமோகனன், எந்த அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையில் தான் எவ்வாறு பணியாற்றுகிறேன் என்பதையும் கூறினார்.

நேற்று முன் தினம் வைத்தியசாலை கதிரியக்கப் பிரிவு ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்து தீவக மக்கள் படும் மருத்துவ நெருக்கடிகளை மிகுந்த மன உளைச்சலுடன் எடுத்து உரைப்பதாக அவர் கூறினார். ஒரு வருடமாக எந்தவொரு மருத்துவரும் தனக்கு பிரத்தியேகமாக நியமிக்கப்படாத நிலையில் மருத்துவ நிபுணர் ஆகிய தான் எந்த அடிப்படை வசதிகளுமின்றி கடமையாற்றி வருவதாகவும் 15 வைத்தியர்கள் இருக்கவேண்டிய ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் 5 வைத்தியர்களே கடமையாற்றுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஏனைய கடல்கடந்த தீவுகளில் இருந்து வைத்திய சேவைக்கு வருபவர்களுக்கு உரிய மருத்துவ வசதியை வழங்காது விடும்போது அந்த வறிய மக்களின் நிலை குறித்து தான் மிகுந்த கவலை அடைவதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறான நிலையில் தானும் மாற்றலாகிச் செல்ல இருப்பதாகவும் இனி வரும் காலத்திலாவது இந்த வைத்தியசாலை ஏனைய யாழ்.மாவட்ட ஆதார வைத்தியசாலைகளான பருத்தித்துறை, தெல்லிப்பளை, சாவகச்சேரி போன்று மருத்துவர் நியமனங்கள், வளப்பங்கீடுகள் மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமான ஒன்று எனக் குறிப்பிட்டார்.

வைத்திய அத்தியட்சகர் ப.தீலிபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாகாண சுகாதாரப் பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள், மருத்துவர்கள், பிரதேச செயலர், நலன்புரி சங்கத்தினர் ஊழியர்கள் சுகாதார நடைமுறைகளுடன் கலந்து கொண்டனர்.

போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் உரையாற்றுகையில், மருத்துவ நிபுணர் கல்பனா இன்னொரு வைத்திய நிபுணர் வரும் வரை யாழ். போதனா வைத்தியசாலையில் கடமை பொறுப்பேற்கத் தேவையில்லை. தொடர்ந்து ஊர்காவற்றுறையில் பணியாற்றலாம்-என்றார்.

ஏனைய வைத்தியசாலைகளிலிருந்து குறிப்பாக தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையிலிருந்து இங்கு பொறுப்பேற்க வேண்டிய சில வைத்தியர்கள் சில வருடங்களாக பொறுப்பேற்காது இருப்பதாகவும் இங்கு கடமையாற்றும் சிலரும் விடுவிக்கப்படவுள்ளதால் தாம் மிகுந்த கவலை அடைவதாகவும் நலன்புரிச் சங்கத்தினர் தெரிவித்தனர்.



## 4 மில்லியன் ரூபாவை தானம் வழங்கும் ரஞ்சன் ராமநாயக்க

கொழும்பு, ஜன.03

பொருளாதார ரீதியில் சிரமப்படும் மக்களுக்கு நிதியுதவியளிக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இருந்து பெற்ற ரூ.4 மில்லியன் கொடுப்பனவுகளையே பொருளாதார ரீதியாக சிரமப்படும் மக்களுக்கு நன்கொடையாக வழங்குவதாக அறிவித்தார்.

இந்த முயற்சிக்கு "பண தன்சல்" என்று பெயரிடப்பட்டுள்ளார். பொருளாதார உதவி தேவைப்படும் பொதுமக்கள் 0773624927 என்ற எண்ணில் தனது அலுவலகத்தை தொடர்புகொள்ள அவர் கோரியுள்ளார்.

## மகசின் சிறைச்சாலைக்குள் போதைப் பொருள் பொதி!

கொழும்பு, ஜன.03

கொழும்பு மகசின் சிறைச்சாலையின் கூரைக்கு மேலாக சிறைச்சாலைக்குள் எறியப்பட்ட பொதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தப் பொதி மேலதிக விசாரணைகளுக்காக பொரளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அந்த பொதியில் இருந்து இரண்டு கையடக்க தொலைபேசிகள், மின்னேற்றி, சிம் அட்டைகள், கையடக்க தொலைபேசி மின்கலம், ஐஸ் ரக போதைப்பொருள் என சந்தேகிக்கப்படும் சிறிய ரக பைக்கெற் மற்றும் கஞ்சா என கருதப்படும் சிறிய ரக பொதி, 10 புகையிலை என்பன மீட்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலையில் சேவையாற்றும் அதிகாரி ஒருவரினால் இந்த பொருட்களுடனான பொதி மீட்கப்பட்டதாக சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# 2021 மார்ச்சுக்குள் இலங்கையில் 20 சதவீதமானோருக்கு தடுப்பூசி

### விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர



கொழும்பு,ஜன.03

**2021ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டின் சனத்தொகையில் 20 சதவீதமானவர்களுக்கு கொவிட் தடுப்பூசி கிடைக்கப்பெறுமென தொற்று நோய் தடுப்புப்பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகில் ஒவ்வொரு மில்லியனுக்கு 522 கொரோனா தொற்றாளர்கள் கடந்த 2020ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டுள்ளனர்.

தெற்காசியாவில் இது மிகவும் அதிகமாகும். ஒவ்வொரு மில்லியனுக்கும் 5,809 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். எமது நாட்டில் மில்லியனுக்கு 1,886 பேர் கொவிட்19 தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு மில்லியன் சனத்தொகைக்கும் 09 பேர் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர். தெற்காசியாவில் ஒவ்வொரு மில்லியனுக்கும் 89 பேர் உயிரிழந்துள்ளனர். என்றாலும் எமது நாட்டில் ஒவ்வொரு மில்லியன் சனத்தொகைக்கும் 09 பேர் தொற்று காரணமாக உயிரிழந்துள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபனம் உட்பட பல நிறுவனங்கள் இணைந்து கொவிட்19 தடுப்பூசியை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க பணியாற்றிவரும் நிலையில் எமது நாட்டின் சனத்தொகையில் 20 சதவீதமானவர்களுக்கு இவ்வருடத்தின் முதல் காலாண்டில் கொவிட்19 தடுப்பூசி கிடைக்குமென உறுதியளிக்கப்பட்டுள்ளது-என்றார்.

## போர்க்குற்றங்களில் இராணுவம் ஒருபோதும் ஈடுபடவில்லையாம்!



கொழும்பு, ஜன. 03

போர்க்குற்றங்களில் இராணுவம் ஈடுபடவில்லை என பாதுகாப்பு செயலர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், ஐ.நா மனித உரிமை சபையின் மார்ச் மாத தொடரை மையப்படுத்தி எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் வழங்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2009ஆம் ஆண்டு முதல் எமது இராணுவத்திற்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. நாம் படுகொலைகளில் ஈடுபட்ட இராணுவம் கிடையாது. மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவம் ஆகும். எமக்கு எந்தவொரு அச்சமும் இல்லை-என்றார்.

## மாகாணத் தேர்தலில் சு.க தனித்து போட்டியிடலாம்

### திலும் அமுனுகம கூறுகிறார்



கொழும்பு, ஜன. 03

இலங்கை பொதுஜன பெரமுன கூட்டணியிலுள்ள எந்தவொரு கட்சியும் மாகாண சபைத் தேர்தலில் தனித்து போட்டியிடலாம் என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம கூறியுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய இராஜாங்க அமைச்சர், தனித்து போட்டியிடும் பங்காளி கட்சிகளின் நடவடிக்கையை பெரமுன எதிர்க்காது.

பொதுஜன பெரமுன ஒரு வலுவான கட்சி. இது இலங்கை சுதந்திரக் கட்சியாக இருந்தாலும் அல்லது வேறு ஏதேனும் இணைந்த கட்சியாக இருந்தாலும், அவர்கள் மாகாண சபை தேர்தலில் தனித்து போட்டியிடலாம்.

பெரமுனவுடன் இணைந்த கட்சிகள் நியாயத்துடன் சமமாக நடத்தப்படும். கட்சிகளுக்கு இடையில் சமமான அணுகுமுறையை கடைப்பிடிப்போம்-என்றார்.



# மாகாண சபைகள் ஒழிக்கப்படுகிறதா?

## கொந்தளிக்கும் அரசியல் கட்சிகள்

ரஞ்சன் அருண்பிரசாத்
பி.பி.சி. தமிழ்

இலங்கை - இந்திய அரசாங்கங் களுக்கு இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கையில் அமல்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையை இல்லா தொழிக்கும் திட்டமொன்றை அரசாங் கம் முன்னெடுத்துள்ளதாக கடந்த சில தினங்களாக அதிகம் பேசப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் பி.பி.சி. தமிழ் பல்வேறு கோணங்களில் ஆராய்ந் தது.



**எளிதான செயல் கிடையாது**

மாகாண சபைகளை ரத்து செய்வது என்பது தீயுடன் விளையாடுவதை போன்றது என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தெரிவிக்கின்றது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதி பதியுமான மைத்திரிபால சிறிசேன இதனைக் குறிப்பிட்டுள்ளார். 13வது திருத்தத்தை ரத்து செய்வது இலகுவான விடயம் கிடையாது என அவர் கூறியுள்ளார்.

அவ்வாறு 13வது திருத்தம் ரத்து செய்யப்படுமாக இருந்தால், இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையில் பாரிய விரிசல் ஏற்படக்கூடும் என மைத்திரிபால சிறிசேன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், நாட்டில் கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளை, மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் வரை மீண்டும் செயற்படுவதற்கான யோசனை யொன்றை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, அரசாங்கத்திற்கு முன்மொழிய தீர்மா னித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழு இந்த தீர்மானத்தை அண்மை யில் எட்டியுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித் திருந்தார்.

**மாகாண சபையை ஒழிப்பதே அரசின் நோக்கம்**

மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்கும் எண்ணத்தை அரசாங்கம் கொண்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்தி ரன், பிபிசி தமிழுக்கு இதனைக் குறிப்பிட்டார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க இடமளிக்க முடியாது என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என அவர் கூறுகின்றார்.



இரண்டு நாடுகளின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு முறைமை இதுவென அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

இந்த ஒப்பந்தத்தின் ஊடான அதிகார பகிர்வு முறைமை தமிழர்களுக்கு ஏற்றதாக இல்லாத போதி லும், இந்த முறையை அடிப்படையாகக் கொண்டே அர்த்தமுள்ள அதிகார பகிர்வொன்றை பெற்றுக் கொள்ள வேண்டும் என அவர் கூறுகின்றார்.

இந்த உறுதிமொழிகளை இலங்கை அரசாங்கம், பல்வேறு சந்தர்ப்பங்களில் சர்வதேசத்திற்கு வழங்கியுள் ளமையினால், மாகாண சபை முறைமையை இல்லாது செய்வதற்கு அனுமதி வழங்க முடியாது எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

மாகாண சபை முறைமையை அர்த்த முள்ளதாக்கு வதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப் படும் என எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிடு கின்றார்.

அத்துடன், மாகாண சபை முறையை அர்த்தமுள்ள தாக வலுப்படுத்தி, இனப்பிரச்சினைக்கான தீர்வாக அது அமைய வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவிக்கின்றார்.

**கருத்தொற்றில்லாமல் செயல்படுத்த முடியாது**

இலங்கை அரசியலமைப்பிலுள்ள ஒரு விடயத்தை, ஒரு தரப்பின் நிலைப்பாட்டிற்கு அமைய இல்லா தொழிக்க முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பி.பி.சி. தமிழுக்கு இதனைக் குறிப்பிட்டார்.

இரண்டு நாடுகளுக்கு இடையில் செய்துக்கொள்ளப் பட்ட ஒப்பந்தமொன்றின் விளைவாக வந்த ஒரு மாற் றமே, மாகாண சபை முறைமையை என அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

இலங்கையின் இனப்பிரச்னை விவகாரம், இந்தியா வையும் பாதித்துள்ளதாக கூறிய ரவூப் ஹக்கீம், அதன் விளைவாகவே இந்த முறைமை ஏற்படுத்தப்பட்ட தாகவும் கூறுகின்றார்.

ஒரு சில குழுவினரின் கருத்துக்களை நம்பி, இராஜ தந்திர ஒப்பந்தமொன்றை மீறுவதன் ஊடாக பாரிய தவறை அரசாங்கம் இழைப்பதாக அவர் குறிப் பிடுகின்றார்.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் வகையில் அமையப் பெற்ற முக்கியமான அம்சம் இந்த 13 ஆவது திருத்தம் என அவர் கூறுகின்றார்.



மாகாண சபை முறைமை குறித்து, பெரும்பான்மை யினர் மாத்திரம் தீர்மானமொன்றை எட்ட முடியாது என கூறுகின்ற ரவூப் ஹக்கீம், இந்த விடயத்தில் கட்டாயம் சிறுபான்மையினரையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

13ஆவது திருத்தத்திற்கும் அப்பால் சென்ற அதிகார பகிர்வை வழங்குவதாக சர்வதேசத்திற்கு அரசாங்கம் கூறி, காலத்தை கடத்தியுள்ளதாகவும் அவர் கூறுகின் றார்.

மாகாண சபை முறைமையை இல்லா தொழிக்கும் விடயத்திற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடமளிக்க முடியாது எனவும், அவ்வாறு மாகாண சபை முறைமை இல்லாதொழிக்க முயற்சிக்கப் பட்டால், அதற்கு எதிராக போராடுவதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவிக் கின்றார்.

**மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு**

அரசாங்கத்திற்குள்ளேயே இரண்டு நிலைப்பாடுகள் காணப்படுகின்றமையி னால், தற்போதைய சூழ்நிலை யில் மாகாண சபை முறைமையை அவர்களி னால் இல்லாதொழிக்க முடியாது என தாம் நம்புவதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவிக்கின்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், பி.பி.சி. தமிழுக்கு இதனைக் குறிப்பிட்டார்.

**இரண்டு நாடுகளுக்கு இடையில் செய்துக்கொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்றின் விளைவாக வந்த ஒரு மாற்றமே, மாகாண சபை முறைமை. இலங்கையின் இனப்பிரச்னை விவகாரம், இந்தியாவையும் பாதித்துள்ளதாக கூறிய ரவூப் ஹக்கீம், அதன் விளைவாகவே இந்த முறைமை ஏற்படுத்தப்பட்ட தாகவும் கூறுகின்றார். ஒரு சில குழுவினரின் கருத்துக்களை நம்பி, இராஜ தந்திர ஒப்பந்தமொன்றை மீறுவதன் ஊடாக பாரிய தவறை அரசாங்கம் இழைப்பதாக அவர் குறிப்பிடுகின்றார்.**



அரசாங்கம் சார்பில் நாடாளுமன்ற பதவிகள் கிடைக் காத தரப்பினர், மாகாண சபையின் ஊடாகவே தமக் கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள எதிர்பார்த் துள்ளதாக அவர் கூறுகின்றார்.

நாட்டுக்காக அன்றி, தமக்கான அங்கீகாரத்திற்காக அரசாங்கம் மாகாண சபை முறைமையை பாதுகாக்கும் என தாம் நம்புவதாகவும் மக்கள் விடுதலை முன்னணி யின் நாடாளுமன்ற உறுப்பி னர் விஜித ஹேரத் தெரிவிக் கின்றார்.

**அரசாங்கத்தின் பதில்**

மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு கிடையாது என அமைச்சர வைப் பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவிக்கின்றார்.

மாகாண சபை இல்லாதொழிக்கப் படும் என வெளியாகியுள்ள தகவல் தொடர்பில் பிபிசி தமிழுக்கு வழங்கிய பிரத்யேக பேட்டியிலேயே அவர் இதனைக் கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்திற்குள் எந்தவொரு பேச்சுவார்த்தையும் இடம்பெறவில்லை எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தல் பிற்போட தாம் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவிக்கின்றார்.

நாட்டில் காணப்படுகின்ற கொவிட் வைரஸ் தாக்கத்தை அடுத்தே, இந்த தீர்மானத்தை எட்டியுள்ளதா கவும் அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவிக்கின்றார்.



# முஸ்லிம் சமூகத்தை மேலும் சங்கடப்படுத்தாதீர்

இலங்கை முஸ்லிம் சமூகம் வரலாற்றில் சமகாலத்தில் மிக மோசமான நிலைக்கு உள்ளாகியிருக்கிறது. அந்நியர் ஆட்சிக்காலத்திலும் பல்வேறு முரண்பட்ட சூழ்நிலைகள் உருவாகியிருந்தாலும் மத ரீதியான இம்சைக்கு பெரிதும் உட்படவில்லை. சமகாலத்தில் கொரோனா தொற்று நோயை காரணமாக வைத்து இல்லாத ஒரு பிரச்சினையை உருவாக்கி மீண்டும் அதிலிருந்து மீள்வதற்காக முஸ்லிம் சமூகம் மண்டியிட்டுக் கிடக்கிறது.

மூத்தின் இனப்பிரச்னை ஆரம் பத்தில் சிங்கள - தமிழ் பிரச்னையாகவே இருந்தது. பின்னர் அது சிங்கள - தமிழ் - முஸ்லிம் பிரச்சினையாக உருவெடுத்தது. இந்தக் காலப்பகுதியிலேயே முஸ்லிம்கள் தனித்தரப்பாக தம்மை அடையாளப் படுத்த முனைந்தனர். சில சிறிய கட்சிகள் முஸ்லிம்கள் பெயரில் ஆரம்பிக்கப்பட்டாலும் அது அவ்வப்போதே கரைந்து விட்டது. ஆனால் எண்பதுகளுக்கு பின்னால் முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சி பெருவளர்ச்சி கண்டது. அக்கட்சியின் தலைமைத்துவம் 2000 ஆண்டளவில் தனது தனித்துவ அடையாளத்தை மாற்றி தேசிய ஐக்கிய முன்னனி (நுஆ) என்ற கட்சியினையும் உருவாக்கியது. அஷ்ரபின் மரணத்திற்கு பின்னர் இந்தக் கொள்கைகளை முன்னெடுப்பதை விட முஸ்லிம் காங்கிரஸ் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதிலே அதிக அக்கறை செலுத்தியது. அதேநேரம் அக்கட்சி இக்காலத்திலே துண்டு துண்டாக உடைந்து போனது.

முஸ்லிம்களிடமிருந்து வந்த அரசியற்கட்சிகளின் பேரம் பேசும் திராணியும் அதேநேரம் முஸ்லிம் சமூகத்திற்குள்ளேயே இடம் பெற்ற மத ரீதியான சிந்தனைச் சலவையின் விஷ்வரூபமும் தேசிய அபிவிருத்தியில் முஸ்லிம்களின் இணக்க ரீதியான பங்களிப்பும் பிற சமூகத்திற்கு மத்தியில் முஸ்லிம்கள் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தியது. உண்மையில் இது அதீத கற்பிதமான ஓர் அச்ச உணர்வாகும். இந்த உணர்வினை பிற சமூகத்திலுள்ள தீவிர சிந்தனையாளர்கள் நன்கு பயன்படுத்திக்கொண்டனர். இந்த காலகட்டத்தில்தான் அளுத்கம, அம்பாறை, திகன சம்பவங்கள் நடந்தேறின. ஈஸ்டர் தாக்குதலும் இதனைத் தொடர்ந்தே நடந்தது. முஸ்லிம்கள் சூழ்நிலையின் கைதியாக மாறினர். கிறிஸ்தவ சமூகம் அமைதி காத்த அதேவேளை இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவும் பிற சமூக தீவிர சிந்தனையாளர்கள் தவறவில்லை.

இந்தக் கட்டத்தில் தான் ஆட்சி மாற்றம் இலங்கையில் ஏற்பட்டது. பெரும்பாலான முஸ்லிம் கட்சிகள் ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரிக்க சிலர் பொது ஜன பெரமுனவுடன் இணைந்திருந்தனர். புதிதாக உருவாக்கப்பட்ட கோத்தபாய அரசின் அமைச்சரவையில் ஒரே ஒரு முஸ்லிம் அமைச்சரே இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. வரலாற்றில் பெருமளவிலான முஸ்லிம்கள் அரசாங்கத்தில் இல்லாத ஒரு சூழ்நிலை இக்காலத்தில் இடம்பெற்றது. இந்த சூழ்நிலையில்தான் கொவிட் - 19 வைரஸ் உலகெங்கும் பரவத் தொடங்கியது. அது இலங்கையையும் ஆட்கொண்டிருந்தது.

இதன் காரணமாக உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்யவும் தகனம் செய்யவும் உலக சுகாதார




**இலங்கை முஸ்லிம் சமூகம் வரலாற்றில் சமகாலத்தில் மிக மோசமான நிலைக்கு உள்ளாகியிருக்கிறது. அந்நியர் ஆட்சிக்காலத்திலும் பல்வேறு முரண்பட்ட சூழ்நிலைகள் உருவாகியிருந்தாலும் மத ரீதியான இம்சைக்கு பெரிதும் உட்படவில்லை. சமகாலத்தில் கொரோனா தொற்று நோயை காரணமாக வைத்து இல்லாத ஒரு பிரச்சினையை உருவாக்கி மீண்டும் அதிலிருந்து மீள்வதற்காக முஸ்லிம் சமூகம் மண்டியிட்டுக் கிடக்கிறது.**

அமைப்பு ஆலோசனை வழங்கியது. இந்த ஆலோசனையை உலகின் 189 நாடுகள் ஏற்றுக்கொண்டு சடலங்களை நல்லடக்கம் செய்ய அனுமதித்தோடு இலங்கை மாத்திரம் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் உடல்களை தகனம் செய்யவேண்டும் என்று கட்டாயமாக்கியது. இது முஸ்லிம்களைப் பொறுத்தவரை மிக கவலையான ஒரு தீர்மான மாகும். இந்தத் தீர்மானத்திற்கு எதிராக முஸ்லிம் தரப்பிலிருந்த வழக்குகளும் முன்வைக்கப்பட்டன. அதேநேரம் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதியும் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும் சர்வதேச மன்னிப்பு சபை முதலானவும் இந்த தீர்மானத்தை கண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுகாதார நிபுணத்துவக்குழுவை காரணம் காட்டி இலங்கை அரசாங்கம் பல தடவை தப்பித்துக்கொண்டது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினை முஸ்லிம்கள் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். உலக நாடுகளின் பல அமைப்புக்களும் தொற்றுநோயியல் நிபுணர் பலரும் இந்தத் தீர்மானத்திற்கு எதிரான கருத்தினை முன்வைத்திருக்கிற சூழ்நிலையில் இந்த வழக்கிற்கு சாதகமான தீர்ப்பு கிடைக்குமென்று முஸ்லிம்கள் அதிகம் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படாதே தள்ளுபடி செய்யப்பட்டது. முஸ்லிம்களும் நியாயமாக சிந்திக்கின்ற தரப்பினரும் எதிர்பார்த்திராத இந்த முடிவினால் ஏமாற்றப்பட்டனர்.

இந்த வழக்கில் முஸ்லிம்களின் சடலங்களை எரிப்பதற்கு எதிராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரமுகர் பிரபலமான சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் வாதிட்டமை குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து சில நாட்களில் பாராளுமன்றத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இது தொடர்பான மிகக் காரசாரமான உரையொன்றை ஆற்றினார். 'தமிழ் மக்களுக்கு எதிராகவும் முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிராகவும் இன வாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது' என்ற கருத்தினை பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் முன்வைத்தார். இதன் பின்னர் முஸ்லிம் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகம் விழித்துக் கொண்டனர். முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் முஸ்லிம்களுக்கு நீதி கிடைக்காமை குறித்தும் சுகாதார நிபுணர் குழு குறித்தும் பாராளுமன்றில் கேள்வி எழுப்பினார். இவற்றுக்கு நீதி கிடைக்காவிட்டால் முஸ்லிம்கள் வேறு பாதையில் செல்லக்கூடும் எனவும் எச்சரித்தார். அதேநேரம் நீதியமைச்சர் அலி சப்ரி அவர்கள், முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் தூக்க நேரும் என மிக வெளிப்படையான கருத்தினை முன்வைத்துள்ளார்.

முற்போக்கு பெரும்பான்மை ஊடகவியலாளர்களும் அரசியல்வாதிகளும் முஸ்லிம்களின் சடங்களை எரிப்பது குறித்து கண்டனங்களை வெளியிட்டனர். முஸ்லிம் சிவில் சமூகமும் ஏனையோரும் வீதிக்கு இறங்கினர். கனத்தை மயானத்தின் புறச்சுவர்களில் வெள்ளைச் சீலைகளை கட்டினர். அது கபன் சீலைப் போராட்டமாக நாடெங்கும் உருவெடுத்திருக்கிறது. பிரித்தானியாவிலும் பிரான்ஸிலும் கனடாவிலும் இத்தாலியிலும் முஸ்லிம்கள் சடலங்களை எரிப்பதற்கு எதிரான போராட்டத்தில் இறங்கியள்ளனர். நாளடைவில் சடலங்களை எரிக்கின்ற நிகழ்ச்சி தொடருமாக இருந்தால் முஸ்லிம்கள் தமது மதக்கடமைகளை நிறைவேற்றமுடியாத சூழ்நிலைகளினால் தம்மை இழக்க முற்படுவர்.

நாட் செல்லச்செல்ல இந்தப் பிரச்னை சர்வதேச மயப்படுகிற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. தமிழர் தரப்புப் போல முஸ்லிம்களும் தமக்கு சர்வதேச நீதி வேண்டும் என கோர முற்படலாம். கொவிட் - 19 நோயாளர்களை பராமரிக்கின்ற வைத்தியசாலைகளை அடிப்படையாகக் கொண்டு அதன் சுற்றுப்புற சூழலின் பாதுகாப்பு குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது. மரணித்த ஜனாஸா ஒன்றினை எரிக்காது பாதுகாப்பது குறித்தும் நீதி கோரப்பட்டிருக்கிறது. இவை எல்லாமே மேலும் மேலும் சங்கடத்தினை உள்ளாக்குகின்ற செய்திகளாகும்.

முஸ்லிம்களுக்கு ஆதரவாக கிறிஸ்தவ பாதிரிமாரும் கனத்தை மயானத்திற்குச் சென்றிருக்கிறார்கள். மங்கள சமரவீர, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, சஜித் பிரேமதாஸ முதலானோரும் மீண்டும் மீண்டும் தமது எதிர்ப்புக் கருத்துக்களை வன்மையாக வெளியிட்டு வருகின்றனர். 'சந்தர்ப்பவாத அரசியல் எதிர்ப்புகளையப்பட்டு ஒரு நேர்மறையான சமூக சித்தாந்தத்தை ஊக்கவிக்கும் ஒரு பயிற்சியாக இது மாற்றப்பட வேண்டும்' என இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

இதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழுவும்

– பேராசிரியர்
றமீஸ் அப்துல்லா –

முஸ்லிம்களின் சடலம் எரிக்கப்படுவது குறித்து மீண்டும் தமது கருத்தினை வலியுறுத்தியுள்ளனர். அதேநேரம் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டான முயற்சி குறித்தும் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது. மொத்தத்தில் முஸ்லிம் சிவில் சமூகம் ஆறாத துயரத்திற்குட்பட்டிருக்கிறது. அதேநேரம் ஜனாஸாக்களை குளிரூட்டிகளில் தொடர்ச்சியாகப் பாதுகாப்பது குறித்தும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிவரும்.

இந்த சூழ்நிலையில் சடலங்களை எரிப்பதனை விட அடக்குவதற்கு சாதகமான கருத்துக்களை உலக சுகாதார நிறுவனங்களும் நுண்கிருமி தொடர்பான வல்லுனர்களும் தொடர்ச்சியாக தெரிவித்துவருகின்றனர். அதேநேரம் சிங்கள, தமிழ், கிறிஸ்தவ அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் மதச்சார்பற்று தமது கருத்துக்களை தெரிவித்துவருகின்ற சூழ்நிலையில் அரசு முஸ்லிம்களை மேலும் சங்கடத்திற்குட்படுத்துவது நல்லதல்ல. இந்த சூழ்நிலையை கவனமாகக் கையாள அரசு தீவிரமாக முன்வர வேண்டும் என்று முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்கிறது. இந்த இடத்தில் மிலிந்த மொரகொடவின் இந்தக் கூற்று இன்னும் கூர்மையாகக் கவனிக்கத்தக்கது. 'சக்தி உதவியற்றது ஆனால், பொறுமை முடிவுக்கு வரக்கூடிய ஒரு இடம் இருக்கிறது. இது வெறுப்பாக இருக்கக் கூடும்'

ஈழநாடு

# குற்றச்செயல்களை கட்டுப்படுத்த மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

## சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.03

**வடக்கு மாகாணத்தில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாணத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மக்கள் அனைவருக்கும் பிறந்திருக்கும் 2021 ஆம் ஆண்டு சாந்தியும், சமாதானமும் மிக்க ஆண்டாகத் திகழ வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கடந்த வருடம் உலகத்தை அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ள கொரோனா வைரஸ் அச்சத்துடன் கடந்து சென்றுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் காலத்திலும் உலக நியதிக்கு இணங்க வடபகுதியிலும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும், நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இவற்றை உரிய முறையில் பின்பற்றி பொது மக்கள் செயற்படுத்துவதற்கு பொலிஸார் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

அதேபோன்று வடக்கு மாகாணத்தில் கடந்த வருடத்தை விட குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய வேலைத் திட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

பொது மக்களை நல்வழிப் படுத்தி, குற்றச்செயல்களைத் தடுத்து, வடக்கு மாகாணத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதே எமது பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது.

அத்துடன் கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முப்படையினருடன் இணைந்து பொலிஸார் விஷேட வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த நடவடிக்கைகள் மேலும் விரிவாக்கப்பட்டு சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி பொது மக்கள் சுதந்திரமாக வாழ பொலிஸார் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

அதேபோன்று பொதுமக்களுக்கு ஒரு அழைப்பினை விடுக்க விரும்புகின்றேன். போதைப் பொருள் கடத்தல், பாவனை மற்றும் கொள்ளை சம்பவங்கள் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் தொடர்பில் ஏதாவது தகவல்கள் அறிந்திருந்தால்



அதனைத் தெரியப்படுத்தினால் அவற்றைத் தடுத்து நிறுத்த முடியும்- என்றார். (எ)

# டிசெம்பரில் 9,959 கைதிகளுக்கு பிணை

சந்தன ஏக்கநாயக்க

கொழும்பு,ஜன.03

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நாடு முழுவதுமுள்ள சிறைகளிலிருந்து 9 ஆயிரத்து 959 கைதிகள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு விடுதலையான கைதிகளில் பல்வேறு காரணங்களுக்காகப் பிணையில் விடுவிக்க முடியாத கைதிகளும், சிறு குற்றங்களைச் செய்த கைதிகளும் அடங்குகின்றனர் என அவர் தெரிவித்தார். (எ)

# தேசிய பால் உற்பத்தி 70 சதவீதம் அதிகரிக்கும்

கொழும்பு,ஜன.03

உள்நாட்டு பால் உற்பத்தியை இந்த ஆண்டில் 70 சதவீதம் வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபைத் தலைவர் மஞ்சுள மாஹமகே தெரிவித்துள்ளார்.

மாறுபட்ட சுற்றாடல் நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய கால்நடைகளை இனப்பெருக்கம் செய்வது பற்றியும் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (எ)






# வானவில் திட்டம் மூலம் மக்களுக்கு உணவுப்பொருள்கள் பொதி வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜன.03

யாழ்ப்பாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வானவில் திட்டத்தின் கீழ் தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் பொதிகள் 45 பேருக்கு யாழ்ப்பாணம் ஓ.எல்.ஆர்.தேவாலயத்தில் வைத்து அருட்தந்தை அன்ரனிதாஸ் தலைமையில் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சுகாதார அமைச்சின் முன்னாள் சிரேஷ்ட ஆலோசகரும் வானவில் திட்டத்தின் வடக்கு மாகாண இணைப்பாளருமான அடைக்கல முத்து செபஸ்ரியன் நேரு, கலந்துகொண்டு உணவுப்பொருட்கள் பொதிகளை வழங்கினார்.

வடக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு லண்டனைத் தளமாகக்கொண்டு இயங்கும் வானவில் திட்டத்தின் கீழ் 12 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

# தொழிலாளர்களின் சம்பள விவகாரம் பேச்சுக்களை ஒத்திவைக்க வேண்டாம்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. கோரிக்கை

ஹற்றன்,ஜன.03

கொரோனா வைரஸ் தொற்றைக் காரணம் காட்டி பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பான பேச்சுக்களை இனியும் ஒத்திவைக்கக் வேண்டாமென மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் அமரர் பெ.சந்திரசேகரனின் 10 ஆவது ஆண்டு சிரார்த்த தின நிகழ்வு, ஹற்றன் ஸ்ரீ கிருஷ்ணபவான் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

“கடந்த 5 வருடங்களாக 1000 ரூபா சம்பள உயர்வுக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு இரண்டு கூட்டு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டும் ஆயிரம் ரூபாய் பிரச்சினை கவனத்தில் கொள்ளப்படவில்லை.

புதிதாக பதவிக்கு வந்துள்ள அரசாங்கத்தில் 1000 ரூபாய் சம்பள உயர்வை வழங்க வேண்டும் என்று பிரதமர் பாராளுமன்ற வரவு - செலவுத் திட்ட உரையில்



குறிப்பிட்டிருந்தார். இருந்தும் கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் தான் சம்பள உயர்வைப்பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையே உள்ளது.

கூட்டு ஒப்பந்தம் இல்லாமல் சம்பளப் பிரச்னையைத் தீர்க்க முடியாது என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் இன்றுள்ள விலைவாசி அதிகரிப்புக்கு ஏற்ப தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படைச் சம்பளத்தை 1000 ரூபாயாகப் பெற்றுக்கொடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட தொழில்சங்கங்களின் பொறுப்பாகும்.

சம்பள உயர்வு தொடர்பில் இரண்டு சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டும் இணக்கம் எட்டப்படவில்லை. இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றால் சம்பள உயர்வு தொடர்பான பேச்சுக்களை நடத்த முடியாமல் ஒத்தி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டு காலம் இழுத்தடிக்கப்படும் போது தொழிலாளர்களுக்குத் தான் இழப்பு ஏற்படும் என்பதை மறந்து விடக்கூடாது.

ஏனெனில், இறுதியாக செய்து கொள்ளப்பட்ட இரண்டு கூட்டு ஒப்பந்தங்களிலும் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய நிலுவைப் பணம் கிடைக்கவில்லை. கூட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் திகதியிலிருந்து தான் சம்பள உயர்வு வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, கூட்டு ஒப்பந்தம் கால தாமதமாகும் போது அதனால் பாதிக்கப்படப் போவது தொழிலாளர்கள் தான் என்பதை மறந்து விடக்கூடாது.

உலகளாவிய ரீதியில் ‘கொரோனா’ பரவல் காரணமாக சந்திப்புக்களை மேற்கொள்ள முடியாத நிலையில் உலகத் தலைவர்கள்கூடும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றனர்.

அதேபோன்று தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு முக்கியமான ஒன்று என்பதைக் கவனத்தில்கொண்டு இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தொழிற்சங்கங்கள் கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கலாம். அதை விடுத்து ‘கொரோனாவை’ காரணம் காட்டி பேச்சுவார்த்தையை இனிமேலும் இழுத்தடிக்கக் கூடாது”- என்றார். (எ)

# விஞ்ஞானபூர்வ முறைப்படி கொரோனா கட்டுப்படுத்தல்

## மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.03

**விஞ்ஞானபூர்வ முறைப்படி கொரோனா வைரஸ் தொற்றைக்கட்டுப்படுத்த நிபுணர்கள் துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் என சுகாதார சேவைகள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆர்ப்பாட்டங்கள் கொரோனா ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு இடையூறாக உள்ளன. அவ்வாறான நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும் என்றார்.

இதேவேளை கொரோனா வைரஸ் தடுப்பூசியைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட சுகாதார அபிவிருத்திப் பணியகத்தின் பணிப்பாளர் மருத்துவர் பாலித கருணாபேம கூறினார். கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு, மீள் பரிசீலனை செய்து கொண்டு நடவடிக்கை முன்னெடுத்து செல்ல வேண்டியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு வைத்திய சாலைகளில் போதுமான அளவு வசதியுள்ளது என அவர் கூறினார். பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் உட்பட பிரதேச நிறுவனங்களை இணைத்துக் கொண்டு கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளோம்.

பிரித்தானியா மற்றும் தென்னாபிரிக்காவில் புதிதாக இனங்காணப்பட்டிருக்கும் கொரோனா வைரஸ், ஏனைய வைரஸை விட 50 வீத வேகத்தில் பரவக்கூடியது என ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் நீலிகா மலவிகே இந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.(எ)

# பைசர் தடுப்பூசி குறித்து கவலைகள் வேண்டாம்

## சுகாதார அமைச்சு விளக்கம்

கொழும்பு,ஜன.03

கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொண்ட பெண்ணொருவருக்கு மீண்டும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ள நிலையில்பைசர்தடுப்பூசி தொடர்பான கவலைகளை இலங்கை சுகாதார அமைச்சு நிராகரித்துள்ளது.

எந்தவொரு தடுப்பூசியும் ஒரு சிறிய சதவீத தோல்வியைக் கொண்டிருக்கும் என பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கலிபோர்னியாவில் பைசர் தடுப்பூசி பெற்றுக்கொண்ட 45 வயது பெண் தாதி ஒருவருக்கு மீண்டும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் ஹேமந்த ஹேரத் தெரிவித்தவை வருமாறு:

வளரும் நாடுகள் விரைவில் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளும் முகமாக அவசரகால பயன்பாட்டுக்கான பைசர் மற்றும் பயோஎன்டெக் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு கடந்த வியாழக்கிழமை அங்கீகாரம் வழங்கியது.

இந்நிலையில் இலங்கையும் பைசர் மற்றும் பயோஎன்டெக் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் ஆர்வமாக இருக்கிறது. விரைவில் சிறந்த தடுப்பூசி தொடர்பில் முடிவு செய்யப்படும்.

தற்போது தடுப்பூசியின் பாதுகாப்பு மற்றும் செயல்திறனுக்கு மட்டுமே இலங்கை முன்னுரிமை கொடுக்கிறது. அதனைப் பெற்றுக்கொள்வதற்கான விடயங்கள் இரண்டாம் நிலையாக இருக்கும்- என்றார்.

# குறைந்த வட்டியில் வீடு கொள்வனவு கடன் திட்டம்

கொழும்பு,ஜன.03

அரச மற்றும் தனியார்த் துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வீட்டைக் கொள்வனவு செய்ய 2021ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்ட 6.25 சதவீத நிவாரண வட்டியின் கீழ் விசேட கடன் திட்டம் நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் நகர மற்றும் ஓரளவு நகர அளவிலான பிரதேசங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களில் வீடுகளை விலைக்கு வாங்குவதற்கு இதன் மூலம் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

பல்வேறு பிரதேசங்களிலிருந்து கொழும்பு உள்ளிட்ட பல பிரதேசங்களில் கடமையாற்றும் இளம் சமூகத்தினருக்கு இந்தக் கடன் திட்டத்தில் முக்கியத்துவம் வழங்கப்படும். இக்கடன் திட்டத்தின் கீழ் ஆகக்கூடிய தொகையாக ஒரு கோடி ரூபா வழங்கப்படும். திருப்பிச் செலுத்தும் காலம் 25 வருடங்களாகும். அரசாங்க வங்கிகள் மூலம் இந்தக் கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. (எ)

# அரசியல் இலாபம் தேடும் நோக்கில் சர்வதேச விசாரணைக்கு கோரிக்கை



## சாணக்கியன் எம்.பி.எதிர்ப்பு

அம்பாறை,ஜன.03

இலங்கைக்கு எதிராக சர்வதேச நீதிமன்ற விசாரணையை முன்னெடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பவர்கள் அரசியல் இலாபங்களுக்காகச் செயல்படுகின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் குற்றம்சாட்டியுள்ளார்.

அம்பாறை ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சமகால அரசியல் தொடர்பான விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை கூடவுள்ளது. கடந்த அரசாங்க காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இந்தப் பேரவையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருந்தது. ஆனால் தற்போதைய புதிய அரசாங்கம் இப்பேரவையிலிருந்து வெளியேறுவதாக குறிப்பிட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் ஏனைய தமிழ்அரசியல்தரப்பினர்பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பாகிய நாம் சகல தமிழ்த் தரப்பினரும் தற்போது இணைந்து ஒரு முன்மொழிவை இப்பேரவையில் முன்வைக்கவே விரும்புகின்றோம். இதுதொடர்பில் புலம்பெயர் அமைப்புக்கள் உள்ளிட்ட ஏனைய தரப்பினருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளோம். சில அரசியல் தரப்பினர் அரசியல் இலாபங்களுக்காக இவ்விடயத்தில் செயல்பட முயல்கின்றனர். இந்தப் பேரவையில் 47 நாடுகள் வாக்களிக்கவுள்ளன. இதில் 24 நாடுகளின் ஆதரவை நாம் பெற்றால் மாத்திரமே இலங்கைக்கு எதிரான பிரேரணையை நகர்த்த முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த காலங்களில் காலஅவகாசம் கேட்டுள்ளதாகக் கருத்துக்கள் வெளிவந்தன. இவை முற்றுமுழுதான பொய்களாகும். இப்பொய்களை முழுமையாக நாம் நிராகரிக்கின்றோம்.

இப்பேரவையின் விடயங்கள் தொடர்பில் அறிக்கை விடும் சிலருக்கு இப்பேரவை எவ்வாறு இயங்குகின்றது எனக் கூட தெரியாமல் உள்ளது. அண்மையில் ஒரு சிலர் சர்வதேச நீதிமன்ற விசாரணையை இவ்விடயத்தில் கோருகின்றனர். அவ்வாறு இலங்கையை சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதென்றால் இன்னுமொரு நாடு பிரேரணையை முன்வைக்க வேண்டும். யுத்தம் நிறைவடைந்து 11 வருடங்கள் கடந்தும் இனி ஒரு நாடு வந்து பிரேரணை சமர்ப்பித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை நாம் நம்பவில்லை. இதை சிலர் குறுகிய இலாப அரசியலுக்காகத் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் புதிய அரசியல் சீர்திருத்தத்தை அமுல்படுத்துவது குறித்து நாம் இப்பேரவையினை பயன்படுத்த முடியும்.11 வருடங்களாக எமது உறவுகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை மறக்காது இவ்விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டும். நீதி கிடைக்கும் வரை நாம் போராட வேண்டும்.

இலங்கையில் இஸ்லாமியர்களுக்கு எதிராக இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் முஸ்லீம் நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையை இப்பேரவையின் நடவடிக்கையில் இருந்து காப்பாற்ற இலங்கை அரசாங்கம் முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெற இஸ்லாமிய மதகுருக்களை அங்கு அழைத்துச் சென்றிருந்துடன் ஆதரவு கோரிக்கையை முன்வைத்திருந்தது. இதனால் இஸ்லாமிய நாடுகளும் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தன.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றபோதிலும் அரசாங்கத்தை காப்பாற்ற வாக்களித்திருந்தனர். ஆனால் இன்று அச்சமூகத்துக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றன. அதாவது நல்லடக்கம் செய்யும் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையில் இடம் பெறுகின்ற மனித உரிமைக்கு எதிராக எம்முடன் இஸ்லாமிய நாடுகளும் ஒன்று சேர வேண்டும்- என்றார்.

(எ)

# தனிமைப்படுத்தல் பகுதிகளிலிருந்து வெளியேறுவது தண்டனைக்குரியது

## அஜித் ரோஹண எச்சரிக்கை

கொழும்பு,ஜன.03

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 2044 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுள் 1900 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பில்நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொழும்பில் ஆறு பொலிஸ் பிரிவுகளும் அவிசாவளை, ருவன்வெல்ல மற்றும் காத்தான்குடி ஆகிய பொலிஸ் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை நாடளாவிய ரீதியில் சுமார் 60 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும், வீதி ஒழுங்கைகளும், சில தொடர்மாடி குடியிருப்புக்களும் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் அத்தியாவசிய தேவையின்றி அந்தப் பகுதிகளில் வசிப்பவர்கள் வேறு பிரதேசங்களுக்கு செல்வதோ, வெளிப்பிரதேசங்களில் இருப்பவர்கள் அந்தப் பிரதேசங்களுக்கு வருகைதரவோ அனுமதி வழங்கப்படமாட்டாது. அவ்வாறு எவரேனும் சென்றால் அது தண்டனைக்குரிய குற்றச்செயலாகும்.

அதனால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசித்துவரும் மக்கள் தொடர்ந்தும் தங்களது பிரதேசங்களில் இருப்பதுடன் உரிய சுகாதார சட்டவிதிகளைப் பின்பற்ற வேண்டும்.

அதற்கமைய அந்த பிரதேசங்களிலிருந்து மேலும் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படாவிட்டால் அந்தப் பகுதிகளை விடுவிக்க முடியும்.

இந்நிலையில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுள் முக்கிய விதிமுறைகளான, முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியை பேணுதல் ஆகிய சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்டதாக நேற்றுக் காலை ஆறு மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்துக்குள் 23 பேர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இது வரையில் 2,044 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுள் 1900 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டதுடன் சிலருக்கு வழக்குத் தாக்கல் செய்ய எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது- என்றார். (எ)

ஈழநாடு
Online
சம்பவங்கள், செய்திகள் உடனுக்குடன் அறிந்துகொள்ள...
www.eelanadu.lk

# உலக சக்திகளுடன் மோதலை தவிர்க்கவே விரும்புகிறோம்!

## ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு ஈரான் கடிதம்

**தெஹ்ரான், ஜன. 03**

**உலக சக்திகளுடனான மோதலைத் தவிர்க்க விரும்புவதாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு எழுதிய கடிதத்தில் ஈரான் தெரிவித்துள்ளது.**



ஈரானிய புரட்சிப் படையின் தளபதி காஸிம் சோலெய்மனி கொல்லப்பட்டு ஓராண்டு நினைவையடுத்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதுடன் ஈரானின் வளைகுடா பகுதியில் அமெரிக்க இராணுவத்தின் அண்மைய செயற்பாடுகளை ஈரான் கண்டித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில், ஈரானின் வளைகுடா மற்றும் ஓமான் கடலில் அமெரிக்காவின் இராணுவ சாகசத்தை ஈரான் கண்டித்துள்ளது.

அத்துடன், ஈரானுக்கு எதிராக அமெரிக்காவால் போலித் தகவல்கள், ஆதார மற்ற குற்றச்சாட்டுகள் மற்றும் அச்சுறுத்தும் கருத்துக்கள் பகிரப்படுவதையும் ஈரான் கண்டித்துள்ளது.

மேலும், அமெரிக்காவின் போர்க் குணங்கள் பதற்றங்களை ஆபத்தான நிலைக்கு உயர்த்தும் எனவும் அதன் அனைத்து விளைவுகளையும் அமெரிக்காவே பொறுப்பேற்கவேண்டும் என்றும் ஈரான் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளது.

மேலும், ஈரான் மோதலை விரும்பவில்லை என்பதுடன் தமது மக்களையும் தேசிய பாதுகாப்பையும் பாதுகாப்பதற்கும் உறுதி பூண்டுள்ளதாக ஈரான் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.



# தமிழ்நாட்டில் தடுப்பூசி ஒத்திகை தொடங்கியது!

சென்னை, ஜன. 03

கொரோனாத் தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டின் ஒத்திகை தமிழ்நாட்டின் 5 மாவட்டங்களில் உள்ள 17 மையங்களில் நேற்று தொடங்கியுள்ளது.

கொரோனாத் தடுப்பூசியை மக்களுக்கு விரைவாக வழங்குவது குறித்த செயற்பாட்டு ஒத்திகை இந்தியா முழுவதும் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக இவ்வாறு தமிழ்நாட்டில் 5 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 17 மையங்களில் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்கான ஒத்திகை தமிழ்நாட்டில் முதலாவதாக சென்னையில் தொடங்கியது.

சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் கொரோனா தடுப்பூசி ஒத்திகை தொடங்கியது. கொரோனா தடுப்பூசி ஒத்திகையை சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

கொரோனா தடுப்பூசி போடுவதற்காக 47 ஆயிரத்து 500 மையங்கள் கண்டறியப்பட்டுள்ளன. 21 ஆயிரத்து 170 சுகாதாரப் பணியாளர்களுக்கு தடுப்பூசி போடுவதற்காக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2 மணி நேரத்தில் 25 பேருக்கு கொரோனா தடுப்பூசியை போடவேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வெகு விரைவில் இந்த தடுப்பூசி அனைவருக்கும் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# கர்நாடகாவில் பாடசாலைகள் ஆரம்பம்!

திருவனந்தபுரம்,ஜன.1

கர்நாடகத்தில் 8 மாதங்களுக்குப் பிறகு நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை பாடசாலைகள் திறக்கப்பட்டன.

இதன்படி 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.

அத்துடன் 6,7,8,9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வெளிப்புறக் கல்வித் திட்டத்தின் (வித்யாகமா) மூலம் கல்வி பயில ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் வீடுகளுக்கு சென்று பாடங்கள் எடுக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தியாவில் கொரோனா தொற்று படிபடியாக குறைந்து வருகின்றது. அத்துடன் பிரித்தானியாவில் பரவி வருகின்ற கொரோனா வைரஸின் புதிய பிறழ்வு குறித்தும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## ஆப்கானில் மற்றுமொரு ஊடகவியலாளர் கொலை!

காபூல், ஜன. 03

ஆப்கானிஸ்தானின் கோர் மாகாணத்தில் வானொலி ஊடகவியலாளர் ஒருவர் ஆயுததாரிகளால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் கடந்த இரண்டு மாதங்களில் கொல்லப்பட்ட ஐந்தாவது ஊடகவியலாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வோர்ஸ் ஒஃப் கோர் வானொலியின் தலைமை ஆசிரியர் பெஸ்முல்லா அடெல் ஐமாக் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவர் மீதான தாக்குதலுக்கு எந்தவொரு குழுவும் இதுவரை பொறுப்பேற்கவில்லை.

## பிரெக்ஸிட் நடைமுறையின் எதிரொலி

# லண்டன் ரயில் பயணிகளிடம் பாரிஸில் சுங்கப் பரிசோதனை!




பாரிஸ், ஜன. 03

புத்தாண்டுடன் பிரெக்ஸிட் வர்த்தக ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த பிறகு நேற்று முதலாவது ஈரோஸ்ரார் ரயில் லண்டனில் இருந்து பாரிஸ் வந்தடைந்தது.

நேற்று முன் தினம் பகல் 12.49 மணிக்கு பாரிஸ் கார்-டு-நோட் ரயில் நிலையத்தில் லண்டன் பயணிகளுக்கான மேடையை வந்தடைந்த ஈரோஸ்ரார் ரயிலில் இருந்து இறங்கிய பயணிகளுக்கு அங்கு வழமைக்கு மாறான, ஆச்சரியமான பரிசோதனைகள் காத்திருந்தன.

சுங்க அதிகாரிகளையும் அவர்களது சோதனைகளையும் பயணிகள் அங்கு எதிர்கொள்ள நேரிட்டது. மதுவகைகள் மற்றும் சிகரெட் புகையிலைப் பொருள்கள் சோதனையிடப்பட்டன. 300 யூரோக்களுக்கும் அதிக பெறுமதியான பொருள்களை தமது பொதிகளில் எடுத்துவந்த பயணிகளிடம் அவற்றுக்கான ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டன.

பழக்கத்தில் இல்லாத இந்தப் புதிய சோதனைகள் பயணிகளுக்கு ஆச்சரியம் அளித்தன. எனினும் தாமதங்கள் ஏதும் இன்றி விரைவாக சோதனைகள் நடத்தப்பட்டன

பிரிட்டனில் இருந்து வரும் பயணிகள் இறைச்சி, பால் மற்றும் பாற் பொருள்கள் போன்றவற்றை ஐரோப்பிய ஒன்றியத்தின் எல்லைக்குள் எடுத்துவருவது தடைசெய்யப்பட்டுள்ளது. பூக்கள், மரக்கறி, பழங்கள், மரக்கன்றுகள் போன்றன உயிரியல் பரிசோதனைக்குப் பின்னரே அனுமதிக்கப்படும்

புதிய சோதனை நடைமுறைகள் தொடர்பாகச் சுங்கப் பணியாளர்கள் பயணிகளுக்கு விளக்கம் அளித்தனர்.

நேற்று பாரிஸில் இருந்து லண்டன் சென்றடைந்த பயணிகளும் அங்கு இது போன்ற புதிய நடைமுறைகளைக் கடந்து செல்ல நேர்ந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டனில் இருந்து கால்வாயை தாண்டி வந்த வாகனங்களும் கலே பகுதியில் நேற்றுமுன்தினம் சுங்கப் பரிசோதனைகளைச் சந்தித்த பிறகே வெளியேற முடிந்தது.

47 ஆண்டுகால உறவுக்குப் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு பிரிட்டன் உத்தியோகபூர்வமாக விலகியிருப்பதை அடுத்து இருநாடுகளுக்கும் இடையே இருந்துவந்த கட்டுப்பாடுகள் அற்ற சுதந்திரமான பயணிகள் மற்றும் பொருள் போக்குவரத்துகள் முடிவுக்கு வந்துள்ளன.

# புத்தாண்டில் இந்தியாவில் 60,000 குழந்தைகள் பிறப்பு

புதுடில்லி, ஜன. 03

புத்தாண்டு தினத்தில் உலகிலேயே அதிகபட்சமாக 60,000 குழந்தைகள் இந்தியாவில் பிறந்துள்ளதாக யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெப் அமைப்பு ஒவ்வொரு ஆண்டும் உலக அளவில் புத்தாண்டு தினத்தில் பிறக்கும் குழந்தைகள் குறித்த புள்ளி விவரத்தை வெளியிட்டு வருகிறது.

அந்த வகையில் 2021 ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தில், ஜனவரி 1ஆம் திகதி பிறந்த குழந்தைகள் பற்றி தகவலை வெளியிட்டுள்ளது.

அதில் ஜனவரி 1ஆம் திகதி உலகம் முழுவதும் 3,71,504 குழந்தைகள் பிறந்துள்ளதாகவும் இதில் இந்தியாவில் அதிகபட்சமாக 60,000 குழந்தைகள் பிறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை குழந்தை பிறப்பு விகிதத்தில் முதலிடத்தைப் பிடிக்கும் சீனாவைப் பின்னுக்குத் தள்ளி இந்தியா தொடர்ந்து இரண்டாவதாக முதலிடம் பெற்றுள்ளது.

எனினும் இந்தியாவில் புத்தாண்டு குழந்தை பிறப்பு விகிதம் கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு குறைந்துள்ளது.

கடந்த ஆண்டு புத்தாண்டில் இந்தியாவில்



67,395 குழந்தைகள் பிறந்தன.

இதனிடையே இந்த ஆண்டு புத்தாண்டில் குழந்தை பிறப்பு விகிதத்தில் சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது. அங்கு இந்த புத்தாண்டில் மட்டும் 35,615 குழந்தைகள் பிறந்துள்ளன.

இதற்கு அடுத்தப்படியாக நைஜீரியா (21,439), பாகிஸ்தான் (14,161), இந்தோனேசியா (12,336), எத்தியோப்பியா (12,006), அமெரிக்கா (10,312), எகிப்து (9,455), பங்களாதேஷ் (9,236) மற்றும் கொங்கோ ஜனநாயக குடியரசு (8,640) குழந்தைகள் பிறந்துள்ளன.

# இங்கிலாந்து அணி வீரர்கள் எவருக்கும் தொற்று இல்லை!




இலங்கை புறப்படுவதற்கு இங்கிலாந்து கிரிக்கெட் அணி வீரர்கள் மேற்கொண்ட கொரோனா பரிசோதனையில், எவருக்கு தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா ரைவஸ் தொற்று காரணமாக கடந்த வருடம் மார்ச் மாதம் நடை பெற இருந்த இலங்கை - இங்கிலாந்து டெஸ்ட் தொடர் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்தத் தொடர் எதிர்வரும் 14ஆம் திகதி தொடங்குகிறது. இதற்காக இங்கிலாந்து அணி வீரர்கள் இன்று இலங்கை வருகின்றனர். புறப்படுவதற்கு முன் கொரோனா பரிசோதனையில் அனைவரும் தகுதி பெற வேண்டும்.

நேற்று அவர்களுக்கான கொரோனா பரிசோதனை முடிவுகள் கிடைத்தன. இதில் எவருக்கும் தொற்று இல்லை என உறுதிசெய்யப்பட்டுள்ளதால், அவர்கள் அனைவரும் புறப்படுகின்றனர்.

இலங்கையில் குறிப்பிட்ட நாட்கள் தனிமைப்படுத்தலில் இருந்த பின் அவர்கள் விளையாடத் தொடங்குவார்கள்.

இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி, எதிர்வரும் 14ஆம் திகதி காலி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.



# இளம் வீரர்களை கொண்டு தென்னாபிரிக்கா அணியை எதிர்கொள்ளும் இலங்கை!

அணியில் முக்கியமான ஐந்து வீரர்கள் உபாதைக்குள்ளாகியுள்ள நிலையில், இளம் வீரர்களை கொண்டு தென்னாபிரிக்கா அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை கிரிக்கெட் அணி விளையாடவுள்ளது.

செஞ்சூரியனில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியின்போது, சுரங்க லக்மால், கசுன் ராஜித, லஹிரு குமார, தினேஷ் சந்திமால் மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் உபாதைக்குள்ளாகினர். இதனால் இவர்கள் அனைவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியை தவறவிடுகின்றனர்.

இந்தநிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டியில், சுரங்க லக்மாலுக்கு பதிலாக துஸ்மந்த சமீர அணியில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை மற்றொரு வேகப்பந்து வீச்சாளரான லஹிரு குமாரவிற்கு பதிலாக, அசித்த பெனார்டோ டெஸ்ட் அறிமுகத்தை பெறலாம்.

மேலும், தினேஷ் சந்திமாலுக்கு பதிலாக லஹிரு திரிமன்னேயும், தனஞ்சய டி சில்வாவிற்கு பதிலாக மினோத் பானுக டெஸ்ட் அறிமுகத்தையும் பெறலாம்.

எனினும், இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் அதிகாரப்பூர்வமான இலங்கை அணி விபரம் அறிவிக்கப்படவில்லை.

இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில், தென்னாபிரிக்கா அணி இன்னிங்ஸ் மற்றும் 45 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இரண்டாவது டெஸ்ட் போட்டி, நாளை ஜோகனஸ்பர்க் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

(அ)



# பாகிஸ்தான் - நியூஸிலாந்து இரண்டாவது டெஸ்ட் நாளை

பாகிஸ்தான் மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

கிறிஸ்ட்சர்ச் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள இப்போட்டியில், நியூஸிலாந்து அணிக்கு கேன் வில்லியம்சனும் பாகிஸ்தான் அணிக்கு மொஹமட் ரிஸ்வான் அல்லது பாபர் அசாம் தலைமை தாங்கவுள்ளனர்.

கை பெருவிரலில் ஏற்பட்ட லேசான எலும்பு முறிவால் முதலாவது டெஸ்டில் ஒதுங்கியிருந்த பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அசாம் நேற்று முன் தினம் நீண்ட நேரம் பயிற்சியில் ஈடுபட்டார்.

ஆனால் காயத்தில் இருந்து அவர் முழுமையாக குணமடைந்துவிட்டார் என்று அணி மருத்துவக் குழு கூறினால் மட்டுமே இந்த டெஸ்டில் விளையாடுவார். ஒரு வேளை உடல்தகுதியை எட்டாவிட்டால் விக்கெட் காப்பாளர் மொஹமட் ரிஸ்வான் தொடர்ந்து அணித்தலைவராக செயற்படுவார்.

இதுதவிர நியூஸிலாந்து அணியில், காயமடைந்த வேகப்பந்து வீச்சாளர் நெய்ல் வாக்னருக்கு பதிலாக மெட் ஹென்றி அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை பொறுத்தவரை முதல் போட்டியில் நியூஸிலாந்து அணியில் 101 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடரில் முன்னிலைப் பெற்றுள்ளது.

(அ)

# இங்கிலாந்து தொடருக்கு பின்னரே இலங்கை வீரர்களுக்கான ஒப்பந்தம்

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்கான வருடாந்த ஒப்பந்தம், இங்கிலாந்து அணிக்கு எதிராக நடைபெறவுள்ள தொடருக்கு பின்னர் வழங்கப்படும் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி தற்போது தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடிவருகின்றது.

இந்தப் போட்டித் தொடரில் முதல் போட்டி நிறைவடைந்துள்ள நிலையில், தென்னாபிரிக்க அணி தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கின்றது.

இந்நிலையில், இலங்கை கிரிக்கெட் அணியானது, மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்கு முன்னர், வீரர்களுக்கான வருடாந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்லி டி சில்வா தெரிவித்தார்.



"வீரர்களுக்கான வருடாந்த ஒப்பந்தத்தை ஜனவரியின் இறுதிப்பகுதியில் வழங்கவேண்டும். வீரர்களுக்கான ஒப்பந்தம் கடந்த மாதம் நிறைவுக்கு வந்துள்ளது. ஆனால், தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து தொடர்களுக்காக ஒப்பந்தம் இரண்டு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. எனவே, இங்கிலாந்து தொடரையடுத்து, வீரர்கள் வருடாந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவர் எனவும் குறிப்பிட்டார்.

புதிய ஒப்பந்தத்திற்காக வீரர்களை இதுவரை வகைப்படுத்தவில்லை. நாம், கடந்த வருடத்தை மீண்டும் பார்க்கவேண்டும். கடந்த ஆண்டு 30 வீரர்களை இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர்கள் ஒப்பந்தத்தில் இணைத்திருந்தோம்" இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்லி டி சில்வா மேலும் தெரிவித்தார்.




# ரோஹித் துணைத் தலைவர்

இந்திய டெஸ்ட் அணியின் தலைவராக விராட் கோலியும், துணை தலைவராக ரஹானேவும் உள்ளனர். அடிலெய்ட் டெஸ்ட் போட்டி முடிந்த பிறகு விராட் கோலி இந்தியா திரும்பியதால் ரஹானே தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அப்போது புஜாரா துணைத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

காயத்தில் இருந்தும் மீண்ட ரோஹித் சர்மா, அவுஸ்திரேலியா சென்று தனிமைப்படுத்தலை முடித்துக் கொண்டு கடைசி இரண்டு போட்டியில் விளையாடுவதற்கான இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அடுத்த இரண்டு போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. புஜாராவுக்குப் பதிலாக ரோஹித் சர்மா துணை தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# கொரோனாவால் உயிரிழப்போரை அடக்கம் செய்வதா? புதைப்பதா?

## இரு குழுக்களும் வெவ்வேறு நிலைப்பாட்டில்

கொழும்பு,ஜன.03

**கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய முடியுமா? என்பதை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட இரண்டு குழுக்களின் நிலைப்பாடும் வெவ்வேறாக உள்ளதால் தொடர்ந்தும் இழுபறி நிலைமை காணப்படுகின்றது.**

சுகாதார அமைச்சர் பவித்திராவன்னியாராச்சி நியமித்த குழுவின் பரிந்துரைப்படி கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் உடலைத் தகனம் செய்யவேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

எனினும் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே நியமித்த நிபுணர் குழு கொரோனா தொற்றாளர்களின் உடலை அடக்கம் செய்ய அனுமதி அளிக்க முடியும் எனப் பரிந்துரை செய்துள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இரண்டாவது குழுவின் பரிந்துரையை ஏற்க முடியாது எனவும் இரண்டு குழுக்களையும் ஒன்று சேர்ந்து இறுதி அறிக்கை வழங்குமாறு சுகாதார அமைச்சர் பணித்துள்ளார்.

அதற்கமைய கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி இரண்டு குழுக்களும் கூடியபோது இராஜாங்க அமைச்சின் குழு தமது பரிந்துரையில் மாற்றம் இல்லை என அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் உறுதியான முடிவு ஒன்றை அறிவிக்க சுகாதார அமைச்சின் அதிகாரிகள் முன்வரவில்லை.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் உடலை அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. (எ)

## விவசாயியின் சடலம் மீட்பு

ஓட்டமாவடி,ஜன.03

மட்டக்களப்பு, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மஜ்மா நகர் கிராமத்தில் ஒருவரின் சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கிராமத்தில் வீட்டுத் தோட்டம் பராமரித்து வந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான முஹமது கனீபா சுலைமாலெப்பை (வயது- 52) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த நபரின் தோட்டத்துக்கு அருகாமையிலுள்ள ஒருவர் இவரது நடமாட்டம் காணப்படவில்லை, வீட்டின் மின் விளக்குகள் அணைக்கப்படவில்லை என்பதால் பார்ப்பதற்கு சென்றபோது அவர் வீட்டின் முற்றத்தில் மரணமடைந்த நிலையில் கண்டுள்ளார். இதனையடுத்து அந்த நபரின் குடும்பத்தாருக்கும், பிரதேச கிராம உத்தியோகத்தருக்கும் அறிவித்ததைத் தொடர்ந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவரது மரணம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)



## போதைப்பொருள்கள் கடத்தல் கடலில் வைத்து நால்வர் கைது

கொழும்பு,ஜன.03

தென் கடற்பகுதியில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின் போது 05 கிலோ மற்றும் 945 கிராம் ஐஸ் ரக போதைப்பொருள், 02 கிலோ மற்றும் 47 கிராம் ஹெரோயின் மற்றும் 03 கிராம் கேரளக் கஞ்சாவுடன் 04 சந்தேக நபர்கள் செய்யப்பட்டனர் என கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் போது போதைப்பொருள்களை கடத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பலநாள் மீன்பிடிப்படகுகளும் கைப்பற்றப்பட்டன.

இலங்கைக் கடற்படை, போதைப்பொருள் கடத்தல் மற்றும் கடல் மார்க்கமாக நடைபெறும் ஏனைய சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பில் தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், 22 வயது முதல் 29 வயதுடைய மாத்தறை, பொத்துவில், நீர்கொழும்பு மற்றும் மஸ்கெலிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள்கள் மற்றும் பலநாள் மீன்பிடிப்படகுடன் கைது செய்யப்பட்ட இந்த சந்தேகநபர்கள், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஹிக்கடுவை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களுக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ)

## மேலதிக வகுப்புக்கள் ஆரம்பிக்க ஆயத்தம்

கொழும்பு,ஜன.03

பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சுகாதார வழிமுறைகளை உரிய வகையில் கடைப்பிடித்து மேலதிக வகுப்புக்களை ஆரம்பிக்கத் தேவையான திட்ட வரைவுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் தலைமை அதிகாரி மருத்துவர் சுதத் சமரவீர, கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் கடந்த வருடத்தில் வெகுவாக பாதிக்கப்பட்டது. அதனால் மிக விரைவாக கற்றல் செயல்பாடுகளை ஆரம்பிக்க வேண்டியது அவசியம். அதற்கான திட்டமிடல்கள் இடம்பெறுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (எ)

### சிறுத்தை கடித்து ஒருவர் பலி!

## வனவிலங்கு காரியாலயம் மீது தாக்குதல் நடத்திய ஐவர் கைது

அம்பாறை,ஜன.03

வனவிலங்கு காரியாலயம் மீது தாக்குதல் மேற்கொண்ட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை - பானம பிரதேசவாசிகளால் நேற்று முன்தினம் பானம வனவிலங்கு காரியாலயம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே இந்த ஐவரும் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி பானம - குடும்பிகலயில் சிறுத்தையின் தாக்குதலுக்குள்ளாகி நபரொருவர் உயிரிழந்தமையையடுத்து பிரதேச வாசிகளால் காரியாலயம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காரியாலயத்தின் மீது தாக்குதல் மேற்கொண்டு சேதம் ஏற்படுத்திய ஐவரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளதுடன், அவர்களை பொத்துவில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)

## நாட்டு மக்களுக்காக நாம் ஏற்ற பொறுப்பை சவாலுக்கு மத்தியிலும் நிறைவேற்றுவோம்

### பஸில் ராஜபக்ஷ திட்டவட்டம்

கொழும்பு,ஜன.03

பொதுஜன பெரமுன பெற்றுக்கொண்ட வெற்றியைப் பாதுகாத்து கடும் சவால்களுக்கு மத்தியிலும் நாட்டு மக்களுக்காக நாம் ஏற்றுக்கொண்ட பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றுவோம் என பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புதுவருட பிறப்பு அனுஷ்டானத்தில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் உலகளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் ஓராண்டை நிறைவு செய்துள்ளது.

கட்சி என்ற ரீதியில் நாம் பெற்றுக் கொண்ட மக்களாணையைப் பாதுகாக்கும் பொறுப்பு உயர்மட்ட தலைவர்களுக்கும், கிராமிய உறுப்பினர்களுக்கும் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் அனைவருக்கும் உண்டு.

எமக்கு எடுத்துக்காட்டாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளார். அவர் நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் பல தியாகம் செய்துள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கட்சியின் கொள்கையை முன்னிறுத்தி சிறந்த அரச நிர்வாகத்தை முன்னெடுத்து வருகிறார்.



சிறந்த கொள்கையை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கொண்டுள்ளது. அனைத்துத் தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றிபெறும் பலம் எமக்கு உள்ளது. 2021 ஆம் ஆண்டு மக்களுக்குச் சேவையாற்றும் ஆண்டாகவுள்ளது. அனைத்துச் சவால்களுக்கு மத்தியிலும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை பொதுஜன பெரமுன நிறைவேற்றும்- என்றார். (எ)

### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின்

## வாகன வேகத்தை கணிக்க முயன்ற இரு பொலிஸார் பணி இடைநிறுத்தம்

கொழும்பு,ஜன.03

முந்தல் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள், உடன் அமுலுக்கு வரும் வகையில் பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரால் இவர்கள் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். முந்தல் பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொலிஸ் சார்ஜன், பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோரே இவ்வாறு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரின் அறிவுறுத்தலின்றி, வாகன வேகத்தை அளவீடு செய்யும் கருவியைப் பயன்படுத்தக்கூடாதென புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், தனது வலயத்தில் சேவையிலுள்ள பொலிஸாருக்கு ஏற்கனவே உத்தரவிட்டிருந்தார்.


எனினும் அந்த உத்தரவை மீறி, கடந்த டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி, அதிகாலை முந்தல் பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் உத்தியோகத்தர்கள் இருவரும் வேக அளவீட்டு கருவியை எடுத்துச்சென்று கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது சிலாபம் - புத்தளம் வீதியில் பயணித்த வாகனங்களின் வேகம் தொடர்பில் அவர்கள் அவதானம் செலுத்தியுள்ளனர். இதன்போது அவ்வழியால் வந்த கார் ஒன்றினை அவர்கள் அதிக வேகம் காரணமாக நிறுத்தியுள்ளனர். அந்த காரில், புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரே இருந்துள்ளார்.

இந்நிலையிலேயே, தனது உத்தரவை மீறி, வேக அளவீட்டுக் கருவியை எடுத்து சென்றமை தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (எ)

# புதிய அரசியல் யாப்பு குறித்து கருத்தறிவதெல்லாம் ஏமாற்று!

## சாடுகின்றார் விக்னேஸ்வரன் எம்.பி.



**யாழ்ப்பாணம், ஜன. 03**

**பொது மக்களிடம் இருந்து அரசியல் யாப்பு பற்றிய கருத்துக்களைக் கோருவதெல்லாம் ஏமாற்று. பெரும்பான்மையினருக்கு மட்டுமே சார்பான ஒரு அரசியல் யாப்பையே இந்த அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கக்கூடியதாக இருக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

நாட்டின் பல்வேறு வகைபாடு களையும் பன்மைத்துவத்தையும் கருத்தில் எடுத்து அதற்கேற்ப ஒரு அரசியல்யாப்பு வரைவு கொண்டு வரப்படும் என்று நாங்கள் நம்பவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் யாப்பை உருவாக்க அமைக்கப்பட்டிருக்கும் நிபுணத்துவக் குழுவுக்கு நேற்று அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தத் கடிதத்தில் விவரம் வருமாறு:

மேன்மை மிகு மற்றும் படித்த பெரியோர்கள் உங்கள் நிபுணத் துவ குழுவை அலங்கரித்துக் கொண்டிருப்பினும் எங்களுடைய அதுவும் முக்கியமாக தமிழ் மக்க ளின்கருத்துரைகள்எதுவுமே உங்கள் குறித்த குழுவினால் பரிசீலிக்கப்படமாட்டாது என்பது எமது பார்வைபாற்பட்ட கருத்தாகும்.

எமது சந்தேகப்படி பெரும் பான்மை சமூகத்தவருக்கு சார் பான ஒரு அரசியல் யாப்பு வரைவை நீங்கள் ஏற்கனவே தயாரித்து வைத்துக் கொண்டு பொதுமக் களிடம் கருத்துக் கேட்பதாகப் பாசாங்கு செய்து ஈற்றில் ஏற் கனவே தயாரித்த குறித்த வரைவை வெளிவிடுவதே உங்கள் எண்ணம் என்று நாம் கருதுகின்றோம்.

எம்மிடம் கருத்துக்கள் கோரி பத்திரிகைகளில் விளம்பரம் செய்தமைக்கு காரணம் எல்லோ ரினதும் கருத்துக்களையும் கேட்டறிந்தோம் என்று உலகத்திற்குப் பறை சாற்றவே என்று நாம் எண் ணுகின்றோம்.

இவ்வாறான எமது கருத்துக்கு வலுச்சேர்ப்பது என்னவென்றால் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு எம்மிடம் இருந்து தமிழ்ப் பெயர்களைப் பெற்றபின் முதலில் முற்றிலும் சிங்கள மக்களைக் கொண்ட ஆணைக்குழுவையே நீங்கள் நியமித்தீர்கள். அதுவும் மனித உரிமைகள் ஆணைக்குழு விற்கு இவ்வாறான பெரும்பான்மையினரை மட்டுமே நியமித்தீர்கள். பொதுமக்கள் தமது ஏமாற் றத்தை வெளியிடப்போய் பின்னர் ஒரு தமிழரும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

ஆகவே பெரும்பான்மையின ருக்கு மட்டுமே சார்பான ஒரு அரசியல் யாப்பையே இந்த அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க் கக்கூடியதாக இருக்கின்றது. நாட் டின் பல்வேறு வகைபாடுகளையும் பன்மைத்துவத்தையும் கருத்தில் எடுத்து அதற்கேற்ப ஒரு அரசி யல்யாப்பு வரைவு கொண்டு வரப்படும் என்று நாங்கள் நம்பவில்லை.

ஏழு மாகாண பெரும்பான்மை யினர் தமக்கு இயைபான சட் டத்தை இயற்றி மற்றைய இரு மாகாண பெரும்பான்மையின ரின் உரிமைகளையும் எதிர்பார்ப் புக்களையும் பாதிக்கும் வண்ணம் நடவடிக்கைகளை எடுக்கவிருப்பதாக நாம்கணிக்கின்றோம். கடந்த 3000 வருடங்களுக்கு மேலாக தமிழ்ப் பேசும் பெரும்பான்மையிரே இவ்விரு மாகாணங்க ளிலும் இருந்து வந்துள்ளார்கள் என்பதே உண்மை.

ஆனால் புதிய அரசியல் யாப் பைத் தயாரிக்கும் செயற்பாட்டில் நாங்கள் கலந்து கொள்ளவில்லை என்ற அவச்சொல் வராதிருக்கவே நாம் எமது கருத்துக்களை பிறிதொரு ஆவணத்தில் உள்ளடக்கி இத்துடன் இணைத்துள்ளோம்.

11 விடயங்கள் பற்றி எமது கருத்துக்களைக் கோரி 12வதாக மேற்படி 11ல் உள்ளடங்காதவற்றைப் பற்றி குறிப்பிடலாம் என்று கூறியுள்ளீர்கள்.

ஆனால் நாம் முன்னுரையாக சில விடயங்களைக் கட்டாயமாக எடுத்துக்கூற வேண்டியுள்ளது. இதில் நாம் கடந்தகால உண்மைகளைச் சுட்டிக் காட்டியுள்ளோம். அரசாங்கம் வேண்டுமெனில் முன்னர் செய்த அதே தவறுகளை இம்முறையும் இழைக்காது இந்தப் புதிய முயற்சியின் போது இந் நாட்டின் சகல இன மக்களினதும் எதிர்பார்ப்புக் களையும் அரசியல் அபிலாஷைகளையும் நிறைவு செய்யும் விதத்தில் ஒரு தகுந்த அரசியல் யாப்பை வரைந்து பாராளுமன்றத்தில் பதிந்து நிறைவேற்றலாம்-என்றுள்ளது.





காலை
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
பகல்
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
இரவு
6.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) மாதிரி வினாத்தாள்
7.30 மணி : சைவசமயம்


# பாடசாலை சிறுமிகளுக்கு சுகாதார நப்கின் இலவசம்

கொழும்பு, ஜன. 03

தரம் 6 மற்றும் அதற்கு மேல் படிக்கும் அனைத்து பாடசாலை சிறுமிகளுக்கும் இலவச சுகாதார நப்கின்களை வழங்க அரசு திட்டமிட்டுள்ளது என்று கல்வி அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு மாதமும் சுமார் 1.2 மில்லியன் பாடசாலை சிறுமிகள் மாதவிடாய் காலத்தில் பாடசாலைக்கு செல்வதைத் தவிர்க்கிறார்கள் என்று கல்வி அமைச்சு நடத்திய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

பாடசாலைகளில் பயிலும் 65 சதவீத சிறுமிகள் கிராமப்புற மற்றும் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் முறையான சுகாதார நப்கின்களைப் பயன்படுத்துவதில்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலமை சிறுமிகளின் கல்வி நடவடிக்கைகளை பாதிக்கும் என்பதால், அனைத்து அரச பாடசாலைகளிலும் 6ஆம் தரத்துக்கு மேல் படிக்கும் சிறுமிகளுக்கு இலவச சுகாதார நப்பிங்களை வழங்க கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான முன்மொழிவு விரைவில் அமைச்சரவை ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன.

# வைத்தியர் உட்படஏழு பேருக்கு தெல்தோட்டையில் கொரோனா

கொழும்பு, ஜன. 03

கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெல்தோட்டை பகுதி யில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த வைத்தியர் ஒருவர் உட்பட ஏழு பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து தொற்றாளர்கள் கொரோனா தடுப்பு சிகிச்சை நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

86 வயதுடைய ஆணொருவருக்கும், 53 வயதுடைய பெண்ணொருவருக்கும், இளைஞர்கள் இருவருக்கும், மூன்று சிறார்களுக்குமே இவ்வாறு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தெல்தோட்டை பகுதியில் கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் 3 பிரதேசங்களில் உள்ள அவர்களின் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

தெல்தோட்டை வைத்திய சாலை வைத்தியரிடமும் கொரோனா தொற்றாளர் ஒருவர் சிகிச்சை பெற்றுள்ளார்.

நோயாளிக்கு வைரஸ் தொற்று உறுதியா னதையடுத்து வைத்தியரிடம் தனிமைப்படுத்தப்பட்டார்.

இவர்களிடம் கடந்த 28 ஆம் திகதி பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. அதன் முடிவுகள் நேற்று வெளியாகின. இதில் ஏழு பேருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

# மேலும் 562 பேர் குணமடைவு

கொழும்பு, ஜன.03

இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந் தோரின் மொத்த எண்ணிக்கை 36 ஆயிரத்து 717 ஆக உயர்ந்துள் ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் மேலும் 562 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில்இதுவரைகொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 43 ஆயி ரத்து 856 ஆக உயர்ந்துள்ளது.

இதில் 6 ஆயிரத்து 931 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரும் அதேவேளை 406 பேர் கொரோனா தொற்று சந்தேகத் தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றினால் இது வரை 208 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுக்கு அடுத்த வாரம் முதல் ஆயுர்வேத சிகிச்சை

## இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி கூறுகிறார்

கொழும்பு,ஜன. 03

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு அடுத்த வாரத்திலிருந்து ஆயுர்வேத சிகிச்சை அளிக்கப்படும் என ஆயுர் வேத வைத்திய அபிவிருத்தி மற்றும் தேசிய வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்தார்.

இதற்கென நாவின்ன ஆயுர் வேத வைத்திய பரிசோதனை நிலையம் தெரிவு செய்யப்பட்டுள்ள தெனவும்கொரோனா தொற்றாளர்களுக்கு இங்கு சிகிச்சை அளிக் கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிகை யில்-

இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு மேற்கத்தேய மருந்துகள் வழங்கி சிகிச்சை அளிக்கப்பட்டது. இதன் காரணமாக தேசிய மருந்துகள் ஊடாக சிகிச்சை அளிப்பதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டிருந் தது.

இந்நிலையில் தற்போது நாவின்ன வைத்தியசாலையில் கொரோனா நோயாளர்களை அனுமதித்து அவர்களுக்கு தேசிய முறையில் சிகிச்சை அளிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெற் றுள்ளது.

இதன ஊடாகத் தேசிய மருந்துகளால் கொரோனாவை குணப்படுத்த முடியுமா என தீர் மானத்தை எடுக்க கூடியதாக விருக்கும்.

இதன்போது ஆயுர்வேத திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட குடித்வாதி சூரன, சுவ தரணி பாணி, ரத்தகல்கய, சுதர்ஷன பாணி போன்ற தேசிய ஆயுர் வேத மருந்துகள் கொரோனா தொற்றாளர்களுக்கு வழங்கப்படும்- என்றார்.

ஈழநாடு
Eelanadu

# சிறையில் அரசியல் கைதிகள் மரணித்தால் அரசே பொறுப்பு

## வினோ எம்.பி. சுட்டிக்காட்டு



வவுனியா,ஜன.03

**தமிழ் அரசியல் கைதிகளுக்கு சிறைச்சாலையில் மரணங்கள் நிகழ்ந்தால் அரசாங்கம் முழுப்பொறுப்புக்களையும் ஏற்க வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.**

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல் காலங்களில் தற்போதைய ஆட்சியாளர்கள் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம் என்ற ஒரு உறுதி மொழியைக் கூறி தமிழ் மக்களின் வாக்குகளை கவரும் வேலைகளைச் செய்தனர்.

ஆனால் தேசிய கட்சிகள் ஆட்சிக்கு வந்தவுடன் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை கைவிட்டு ஆட்சியைத் தொடர்வது போன்று இந்த ஆட்சியிலும் உறுதி மொழிகளை மீறி தமிழ் மக்களுக்கு மிகப் பெரிய துரோகத்தைச் செய்துள்ளது.

தற்போது குட்டி ஜனாதிபதி போன்று செயல்படும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூட அவ்வாறான வாக்குறுதியை வழங்கியிருந்தார். ஆனால் அது காற்றில் பறந்த வாக்குறுதியாகவுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் கொரோனா வைரஸ் தொற்றுத் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர். இந்த நேரத்தில் மனிதாபிமான அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

அவர்களது உயிருக்கு அரசாங்கம் உத்தரவாதம் வழங்க வேண்டும். அதையும் மீறி சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்ற அரசியல் கைதிகளும் தற்போது கூட தொற்றுக்குள்ளாகி வருகின்றனர்.

அவர்களை உடனடியாக விடுதலை செய்ய அனைத்துத் தரப்பும் ஒன்று திரள வேண்டும். கடந்த காலங்களில் மேற்கொண்ட போராட்டங்கள் அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்காகவேயுள்ளது.

எனவே அரசாங்கத் தரப்பினரின் மனங்களில் கைதிகள் விடயத்தில் மாற்றம் வரவேண்டும். அரசியல் கைதிகளுக்கு சிறைச்சாலையில் மரணங்கள் நிகழ்ந்தால் அரசாங்கமே முழுப்பொறுப்புக்களையும் ஏற்க வேண்டும்.

இந்த விடயத்தில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமுள்ள மனித வுரிமை அமைப்புக்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும். அரசாங்கத்துக்கு உறைக்கும் வகையில் அழுத்தம் கொடுக்கும் செயல்பாடுகளை அனைத்துத் தரப்பும் முன்னெடுக்க வேண்டும் - என்றார். (எ)

# உக்ரைன் நாட்டவர்களின் வருகை சுற்றுலாவா? தனிமைப்படுத்தலா?

## முஜிபுர் ரஹ்மான் கேள்வி



கொழும்பு,ஜன.03

உலக நாடுகள் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த போராடிக்கொண்டிருக்கும் நிலையில் இலங்கை அரசாங்கம் சுற்றுலாப்பயணிகளைத் தனிமைப்படுத்தலுக்காகவா? அல்லது சுற்றுலாவிற்காகவா? அழைத்து வருகின்றது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை நாட்டுக்கு வருகை தந்த உக்ரைன் சுற்றுலாப் பயணிகளுக்கு விமான நிலையத்திலிருந்து உட்பிரவேசிக்க முன் முறையான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

சர்வதேச ரீதியாக கொரோனா வைரஸ் பரவலில் பெருமளவு பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் உக்ரைனும் அடங்குகிறது. கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மில்லியன் கணக்கை எட்டும் 9 ஆவது நாடாக உக்ரைன் அடையாளப்படுத்தப்படுகிறது.

இந்நிலையில் நாட்டின் பொருளாதார ரீதியான வருவாய்க்காக சுற்றுலாப் பயணிகளை உக்ரைனிலிருந்து இங்கு அழைத்து வருவது தற்போதைய சூழலில் பொருத்தமானதல்ல. சர்வதேச ரீதியாக பல நாடுகள் மீண்டும் பயணத்தடைகளை வரையறைகளுடன் மட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும் போது நாமும் இதுதொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமானதாகும்.

மூன்றாம் அலையின் தாக்கமும், புதிய வகையான வைரஸ் பரவலும் அதிகரித்துள்ள நிலையில் உக்ரைன் சுற்றுலாப்பயணிகளின் வருகை மிகுந்த சிக்கலுக்குரிய விடயமாகும். ஏனெனில் நாட்டில் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளது.

இந்நிலையிலேயே உக்ரைனைச் சேர்ந்த ஏழு பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமான நிலையத்திலிருந்து உட்பிரவேசிக்க முன் உரிய பி.சி.ஆர். பரிசோதனைகள் உக்ரைனியர்களுக்கு மேற்கொள்ளப்பட்டதா என்ற சந்தேகம் எழுகிறது. தொற்று உறுதி செய்யப்படின் அவர்கள் 14 நாள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு உட்படுத்தும் போது அவர்களுடைய சுற்றுலாப் பயண கால எல்லை முடிவடைந்து விடும். எனவே அவர்களின் வருகை தனிப்படுத்தல் நோக்கமா? அல்லது உண்மையான சுற்றுலா நோக்கமா? என்று கேட்க விரும்புகின்றோம். அத்துடன், உக்ரைனிய சுற்றுலாப் பயணிகளை அழைத்து வந்துள்ளமை சுற்றுலாத் துறையை மேம்படுத்தவா அல்லது அரசாங்கத்துடன் இணைந்த நட்புறவு வியாபாரிகளை போஷிப்பதற்கா என்ற கேள்வியும் எழுகின்றது - என்றார்.

(எ)

# கொழும்பில் சில பொலிஸ் பிரிவுகள் இரு மாதங்களாக முடக்க நிலையில்

## மக்கள் அசௌகரியம்

கொழும்பு,ஜன.03

கொழும்பு மாவட்டத்தின் வடக்கு, மத்தி உட்பட கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சில பிரதேசங்கள் தொடர்ந்து இரண்டு மாதமளவில் முடக்கப்பட்டுள்ளன.

இதனால் இந்தப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் கடும் நெருக்கடி நிலையை எதிர் கொண்டு வருகின்றனர். கடந்த ஒக்ரோபர் மாத்தின் இறுதி வாரத்திலிருந்து தொடர்ந்து கொழும்பு மாவட்டத்தில் சில பொலிஸ் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தின் முகத்துவாரம், தெமட்டகொடை, ஆட்டுப்பட்டித் தெரு, மருதானை, கொட்டாஞ்சேனை, மாளிகாவத்தை ஆகிய பொலிஸ் பிரிவுகளே இவ்வாறு தொடர்ந்தும் முடக்கப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை இந்தப் பகுதிகளில் அதிகரித்த மட்டத்தில் காணப்படுவதே தொடர் முடக்க நிலைமைக்குக் காரணம் என சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இந்தப் பிரச்னையைக் கையாளவும் தீர்வு வழங்கவும் அரசாங்கம் தேல்வியுற்றுள்ளதை தொடரான முடக்கம் தெளிவாகப் பிரதிபலிக்கின்றது எனவும் கொழும்பில் பி.சி.ஆர். பரிசேதனைகளை அதிகப்படுத்த வேண்டியது அவசியம் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

(எ)

அருந்ததி
இணைய திருமண சேவை
0777 164 524 www.arunthathee.com

மணமகன் விபரம்
15535 | வே | 1979
வட்டுக்கோட்டை | இந்து
Teacher | SL | 158 செ.மீ
அத்தம் (கன்னி) | செவ் : 7

15922 | வே | 1984
நெல்லியடி | இந்து
Genaral Manager
இலங்கை | பூசம் (கடகம்)

15766 | வே | 1987
நல்லூர் | இந்து
Engineer | SL | சூ-செவ் : 6
பூராடம் (தனுசு)| 163 செ.மீ

15829| வே | 1989
சிவபுரி| இந்து | Australia
Reg. Migrant Agent
அத்தம் (கன்னி)| 168 செ.மீ

16024 | வே | 1990
உரும்பிராய் | இந்து
Civil Engineer|SL |175செ.மீ
கார்த்திகை (இடபம்)

மணமகள் விபரம்
15616 | வே | 1984
புங்குடுதீவு | இந்து
Lawyer | SL |172 செ.மீ
பூரட்டாதி (கும்பம்)

15775 | வே | 1990
திருகோணமலை | இந்து
Lawyer | SL
கேட்டை (விருச்சிகம்)

15772 | வே | 1991
சுன்னாகம் | இந்து
Assistant Engineer | SL
ரேவதி (மீனம்) | 162 செ.மீ

15559 | கு | 1994
கிளிநொச்சி | இந்து
BA Following | SL
மூலம் (தனுசு)

16150 | வே | 1995
ஏளாலை| இந்து
SL | 162 செ.மீ
திருவோணம் (மகரம்)

20, கே.கே.எஸ் வீதி,, கொக்குவில், யாழ்ப்பாணம்

# சஜித்-சம்பிக்க இடையே போட்டியா? மறுக்கின்றது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜன. 03

2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர் தொடர்பில் சஜித் பிரேம தாஸ, சம்பிக்க ரணவக்க, சரத் பொன்சேகா ஆகியோருக்கிடையில் கடும் போட்டி நிலவுகின்றது என வெளியாகும் தகவல்களை ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தத் தகவலை நான் அடியோடு நிராகரிக்கின்றேன். அரசியல் எதிரிகளே திட்டமிட்ட அடிப்படையில் இவ்வாறான கதைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, முரண்பாடுகளை உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றனர்.

சஜித் பிரேமதாஸ, சம்பிக்க ரணவக்க, சரத் பொன் சேகா ஆகியோருக்கிடையில் எந்தவொரு போட்டியும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பு என்பது ஜனநாயக அம்சம் கொண்டது. தலைவர் பதவிக்கு வருவதற்கு எவருக்கும் தடை இல்லை.

எனினும், பதுளையில் நடைபெற்ற சம்மேளனத்தின் போது சஜித்தைத் தலைவராக நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அவர் தலைமையில் முன்னோக்கிப் பயணிப்போம்" - என்றார்.

(அ)

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : நாளும் நல்லவை
வழங்குபவர் திரு. ந. சத்தியபாலன்
எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : ரசிகன் என்கிற தலைவன்



**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : ஹலோ கோடம் பாக்கம்
7.00 மணி : ஸ்பொட் லைட்-நாடாளுமன்ற
உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன்



**இரவு**
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சொல்லாடுகளம்




10.00 மணி : பதிவு - அருட்தந்தை
சக்தி வேல் அடிகளார்




**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)
**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே
( நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

**கல்வி TV CHANNEL-1**

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
**இரவு**
6.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) மாதிரி வினாத்தாள்
7.30 மணி : சைவசமயம்

**ஓம் ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : அகில இலங்கை சபரிமலை
ஸ்ரீ சாஸ்தா பீடம் மகரஜோதிப்
பெருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் நவாலி அந்திரன் முருகன்
கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : அகில இலங்கை சபரிமலை
ஸ்ரீ சாஸ்தா பீடம் மகரஜோதிப்
பெருவிழா

**CHANNEL HOLY MARY**

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலி
புனித கிளாரட் குருமடம், நீர்கொழும்பு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : திருவருகைக்கால சிந்தனை
11.00 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.01.2021 அன்று
ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.